# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN


(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 5 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 6**
**JUNE 2021 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,

இயேசுவின் நாமத்தில் சமாதானம் உண்டாவதாக.

தொடர்ந்து ஜாமக்காரன் பத்திரிகையை வெளியிட கர்த்தர் அருள் புரிந்ததற்காக தெய்வத்தை துதிக்கிறேன்.

ஒவ்வொரு ஜாமக்காரனிலும் வித்தியாச வித்தியாசமான தலைப்புகளில் எழுதப்படும் செய்திகள் எங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கிறது என்று பலர் அறிவித்தது எனக்கு மிகவும் திருப்தியை அளிக்கிறது.

கடந்த 2021 **மார்ச்** மாத ஜாமக்காரனில் **சண்டைக்காரி மற்றும் மாமியார் மெச்சும் மருமகள்** ஆகிய இரண்டு செய்திகளும் மிக அற்புதம் வாசிக்கிற பெரும்பாலான **வீடுகளில் நடக்கிறவைகளை** அப்படியே டாக்டர் லில்லின் அவர்கள் படம்பிடித்து காட்டிய மாதிரி எழுதியுள்ளார். அவர்களுக்கு பெண்கள் சார்பில் நன்றி கூறுகிறோம். ஆனால் **இக்கடிதம் எழுதும்** எங்கள் வீட்டிலேயே Dr. லில்லியன் அவர்கள் கூறுவதை எங்களால் செயல்படுத்த முடியவில்லையே ஏன்?

உங்கள் கடிதம் கேள்வி பதில் பகுதிக்கு வரவேண்டியது என்றாலும் கூறுகிறேன். நீங்கள் சரியானபடி இரட்சிக்கப்பட்டு கர்த்தரை திருப்திப்படுத்தும்

# JUNE - 2021

நோக்கத்தோடு இருந்தால் நிச்சயம் உங்கள் மூலம் முழு குடும்பத்தையும் சரிபடுத்த முடியும். அதற்கு முதலில் செய்ய வேண்டியது மற்றவர்களை நீங்கள் மாற்ற முயலாமல் உங்களை நீங்கள் அவர்கள் விரும்பும்படி மாற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் **ஜெபிப்பதை வேதம் வாசிப்பதை** உங்கள் சாட்சியாக அவர்கள் உங்களைப் பார்க்கட்டும். எத்தனை அதிகமாக உங்களை **வார்த்தைகளினால்** கோபப்படுத்தினாலும் பொறுமையான உங்கள் பதிலினால் அவர்கள் கோபம் அதிகமாகாமல் பார்த்துக்கொள்ள முடியும். அவர்கள் யாராயிருந்தாலும் **உங்கள் முகத்தை** கவனிப்பார்கள் அதில் உங்கள் **வெறுப்பையோ** உங்கள் **கோபத்தையோ** வெளியே காட்டிவிடாமல் **கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு** எப்போதும்போல அவர்களுக்கு செய்ய வேண்டிய பணிவிடையை **புன்சிரிப்பு முகத்தோடு** பழகிப் பாருங்கள் அதையும் **ஜெபத்தோடு செய்ய முயலும் போது தான்** வெற்றி கிடைக்கும். காரணம், நீங்களும் சாதாரண **மனுஷி–மனுஷன்** தானே அடக்க முடியாத வெறுப்பும் ஆவேசமும் கொப்பளிக்கும். உங்கள் உள்ளேயிருக்கும் **ஆவியானவர்** அந்த சுபாவத்தை **உங்களை கட்டுபாட்டுக்கு** கொண்டு வர உங்களுக்கு உதவுவார். அதனால் தான் **பரிசுத்த ஆவியானவருக்கு** ஆங்கில வேத புத்தகத்தில் Helper உதவுபவர் Teacher **ஆலோசகராக சொல்லிக் கொடுப்பவராக** ஆவியானவர் உங்களுக்கு உதவுவார். அன்று **இயேசுவின் முகத்தில் துப்பியபோதும்** தலையில் கொட்டி அவமானப்படுத்தியபோதும் அவர் தன் முகத்தில் எந்த வெறுப்பையும் காட்டவில்லை. மாறாக இவர்கள் **அறியாமல் செய்கிறார்கள்** என்றார். அதே சுபாவம் உங்களுக்குள்ளும் வந்துவிடும்.

சில வீட்டில் கணவன் மனைவி ஆவிக்குறியவர்களாக இருப்பார்கள். அதே வீட்டில் **மருமகளோ, மாமியாரோ, மகனோ** இரட்சிக்கப்படவில்லையானால் கணவனும், மனைவியும் என்னதான் அவர்களிடம் பணிந்துபோனாலும் மேலும் மேலும் உங்கள் மனதை **வேதனைபடுத்துபவர்களாகவே இருப்பார்கள்.** அப்போது உங்களுக்குள் பேசிக்கொள்ள வேண்டியது என்னவென்றால் அவர்கள் **இரட்சிப்பின் அனுபவம்** இல்லாதவர். ஆகவே அவர்கள் அப்படித்தான் என்று நீங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வீர்கள். கூடியவரை அவர்கள் விஷயத்தில் நீங்கள் பிரவேசிக்காமல் ஆலோசனை ஏதும் கூறாமல் அமைதியாக இருந்துவிடுங்கள். முக்கியமாக தனிப்பட்ட முறையில் **உங்கள் இருவரின்** சமாதானம் கெடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அது தான் முக்கியம்.

- ☐ ஏறக்குறைய 1½ ஆண்டுக்கு பிறகு **வெளிநாட்டு** ஜாமக்காரன் வாசகர்களுக்கு **3 மாத ஜாமக்காரன்** பத்திரிக்கைகள் ஒரே கவரில் வைத்த அனுப்பட்டது UK. USA. கனடாவை தவிர மற்ற எல்லா நாடுகளுக்கும் ஜாமக்காரன் போய் சேர்ந்தது என்று கேள்விப்பட்டு கர்த்தரை துதித்தேன். அவர்களுக்கோ பத்திரிக்கையை கண்டதும் சொல்ல முடியாத சந்தோஷம் அடைந்ததாக கூறினார்கள்.

☐ பெரும்பாலான வீடுகளில் பிள்ளைகள் **வீடியோ கேம்** ஆடுவதை விடமுடியாமல் அடிமையாகி போய் விட்டார்கள். பெற்றோர் அவர்களை எப்படி அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பது என்று அறியாமல் கலங்கி நிற்கிறார்கள். வீடியோ கேமுக்கு அடிமையான பிள்ளைகள் கல்லூரி படிப்பை படிக்க இயலாது. பெரும்பாலான பிள்ளைகள் பிற்கால வாழ்க்கை பெரும் கேள்வி குறியாகிபோனது.

சிறு பிள்ளைகளின் கையில் மொபைல் கொடுத்த ஆரம்ப நாட்களிலேயே அவர்கள் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து **வீடியோ விளையாட்டுக்கு எவ்வளவு நேரம், ஆன்லைனில் படிக்கும் நேரம் எவ்வளவு** என்பதை திட்டமிட்டு மிக கண்டிப்போடு வளர்த்தி ஆன்லைன் படிப்பு முடிந்த உடன் **மொபைலை பெற்றோர் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.** இப்படிப்பட்ட கண்டிப்போடு ஆரம்பத்திலேயே வளர்த்தாமல் போனதால் இன்று ஒன்றும் செய்ய முடியாமல் பிள்ளைகளின் அன்பையிழந்து, தாங்களும் சந்தோஷம் இழந்து செயலிழந்து தவிக்கிறார்கள்.

**மனோவா தம்பதியினர்** கர்த்தரிடம் தங்கள் **பிள்ளையை** எப்படி வளர்க்க வேண்டும் என்று கேட்டு அறிந்து வளர்த்தினார்கள். அப்படியே பெற்றோராகிய நீங்களும் உங்கள் பிள்ளைகளை ஒவ்வொரு கட்டத்திலும் ஆண்டவருக்கு பிரியமானபடி வளர்க்க ஞானம் கேட்டிருக்க வேண்டும்.

ஆனால் மனோவா குடும்பம் **குறிப்பிட்ட காலம் வரை** சரியாக வளர்த்தினார்கள். ஆனால் அதன்பின் **மகனுக்கு அதிக சுதந்திரம்** கொடுத்துவிட்டார்கள். கடைசியல் பெற்றோர்களும் **அவனுடைய எல்லா தவறுக்கும் கீழ்படியும் நிலைக்கு போய்** கர்த்தருக்கு வேதனை கொடுக்கும் வகையில் **பெற்றோர், மகன்** ஆகிய யாவரும் நடந்துக்கொண்டு கர்த்தரின் கோபத்துக்குள்ளானர்கள். அதன் முடிவு மிக பரிதாபம்.

ஆகவே **மொபைல்** விஷயத்திலும் **வீடியோ கேம்** விஷயத்திலும் பெற்றோர் பிள்ளைகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பழக்க படுத்தாமல் போனால் **குடும்பமே சந்தோஷம் இழந்து** சமாதானம் இழந்து **காலமெல்லாம் நீங்கள் தான் பிள்ளைகளுக்கு சாப்பாடு போட வேண்டிவரும்.** அவர்கள் தங்கள் **கல்லூரி படிப்பும்** இழந்து பிள்ளைகள் **சூரியனைகூட** காணாத முடியாதபடி **கம்ப்யூட்டர் மொபைலுமாய் அறைக்குள்ளேயே** அடங்கிக் கிடக்கின்றனர்.

1.7.2021 **உயர் நீதிமன்றமும்** இந்த Online **விளையாட்டை கட்டுப்படுத்தி** பிள்ளைகளை காப்பாற்ற **மத்திய அமைச்சகத்துக்கு** ஆலோசனை அளித்துமுள்ளது. இப்போதைய பிள்ளைகள் நிலைமை மிக மோசமாக போனதினால் **நீதிமன்றம்** தலையிட்டுள்ளது.

## திருநெல்வேலி CSI டையோசிஸ்க்கு புதிய பிஷப் தேர்தல்

அநேக ஆண்டு இடைவெளிக்குபின் சமீபத்தில்தான் **நீதிமன்றம்** தலையிட்டு நெல்லை CSI டையோசிஸ் **நிர்வாகிகள் தேர்தல்** வெட்டுக்குத்து இல்லாமல் தேர்தலை **வெற்றிகரமாக நடத்தி வைத்தது.**

**நீதிபதிகள்** திரு. N. **பால் வசந்தகுமார்,** DR. P. **ஜோதிமணி, தேர்தல் அலுவலர்களாக** ஓய்வு பெற்ற **மாவட்ட நீதிபதி திரு ரத்தினராஜ்,** ஓய்வுபெற்ற **காவல்துறை துணைக் கண்கானிப்பாளர்** திரு. **ஜெயச்சந்திரன்** அவர்களும் எத்தனையோ **தடைகளை** கடந்து துணிச்சலாக **தேர்தலை நடத்தி** நெல்லை **டையோசிஸ்க்கு பெருத்த நன்மை** செய்திருக்கிறார்கள். **வேத புத்தகத்தின் அடிப்படையில் திருமண்டலம் விஷயத்தில் நீதிமன்றம் தலையிட்டது,** நெல்லை CSI **கிறிஸ்தவ மக்கள்** அவமானப்பட வேண்டிய விஷயமாகும். **திருமண்டல மக்களே ஒற்றுமையாக** தீர்த்துக் கொள்ள வேண்டிய விஷயத்தை **கோர்ட்டுக்கு கொண்டுபோக** அவர்கள் **தீர்ப்பு** கூறினால் உடனே **மற்றவர்கள் அதற்கு ஸ்டே ஆர்டர் வாங்க இப்படிே ஒருவர் மாற்றி - ஒருவர் ஸ்டே ஆர்டர் வாங்கி** அந்த வழக்கை **மாத கணக்கிலும்** வருட **கணக்கிலும்** நீட்டிக் கொண்டே போனதால் அல்லவா **நீதிமன்றமே** தலையிட வேண்டியதாயிற்று.

- ☐ வேதத்தில் **பவுல் எழுதியதை** கவனியுங்கள் 1 கொரி 6:1-8 **உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டனால் வழக்காடும்படி அவன் பரிசுத்தவான் களிடத்தில் போகாமல் அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன?**

**பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயத்தீர்பார்களென்று அறியீர்களா?**

**அற்ப வழக்குகளை தீர்க்க நீங்கள் அபாத்திரரா?** தேவ தூதர்களையும் நியாயத் தீர்போமென்று அறியீர்களா? (அப்படி வழக்கு இருந்தால்) **தீர்ப்பு செய்கிறதற்கு சபையில்** (டையோசிஸ்ஸில்) **அற்பமாய் என்னப்பட்டவர்களை** (உங்கள் வழக்குகளை தீர்க்க) **நியமித்துக் கொள்ளுங்கள்.**

உங்களுக்கு ( **நெல்லை திருமண்டலத்தில்** C.S.I. **சபைகளில் அங்கமா இருப்பவர்களுக்கு) வெட்கம் உண்டாகும்படி இதை சொல்லுகிறேன்** (உங்கள் சபை பிரச்சனைகளை தீர்க்க) (சபையில் & டையோசிஸ்ஸில்) விவேகி **ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையோ?** பின்னே **ஏன் நீதிமன்றம்** போனீர்கள் ?

இப்படிப்பட்ட சாட்சியில்லாத காரியங்களுக்கு காரணம் **கடந்த கால நிர்வாகிகளை** குற்றம் கூற மாட்டேன். **டையோசிஸ்ஸில் உள்ள அனைத்து அங்கத்தினர்கள்தான் காரணம்,** இடம் **மாற்றம்** முதல் **பதவி நியமனம்** வரை இன்னும் பலவித **சிபாரிசுகளுக்கு** பணக்கார நிர்வாகிகளிடம் **பெரும் தொகையோடு** போய் அவர்களிடம் லஞ்ஜமாக பணம்

கொடுத்து காரியத்தை **குருக்கு வழியில்** முடித்துக் கொள்கிறார்கள். ஓட்டு போடும் நீங்கள் **இரட்சிக்கப்பட்டவர்களாக** தெய்வ பயம் உள்ளவர்களாக இருந்தால் நீங்கள் தேர்தலில் தெரிந்தெடுக்கப்படுபவர்களும் **தெய்வ பயம் உள்ளவர்களாக** இருப்பார்கள். **நிர்வாகிகள் செய்த அநீதியான காரணங்களுக்கு கோர்ட் செலவுக்கு** உங்களில் பலர் அவர்களுக்கு **பணம் கொடுத்து உதவியவர்கள் தானே!** ஆதாயம் இல்லாமல் நீங்கள் அப்படி செய்வீர்களா?

- சரி ! இப்போது நீதிமன்ற முயற்சியால் டையோசிஸ்சை நிர்வகிக்க **புதிய நிர்வாகிகள் தேர்தலில் ஜெயித்து வந்துள்ளார்கள்.** இம்முறை நெல்லை டையேபசிஸ்ஸில் ஒரு **பெரும் மாற்றம்** நடந்து இருக்கிறது. **நிரந்தர முதல்வர்** என்று தமிழ்நாட்டு அரசியலில் பேசப்பட்டதைபோல் **பல வருடங்கள் குறிப்பிட்டவர்களே** மாறி மாறி **டையோசிஸ்சை நிர்வகித்தார்கள்.** இப்போதுள்ள அவர்கள் அத்தனை பேரையும் **கூண்டோடு தோற்று போக செய்தீர்கள்** ஆனால் அதையும் **பணம்தான் தோற்றுபோக** செய்ததோ என்ற சந்தேகம் எனக்குண்டு, சந்தேகம் சரியோ என்பதை **நான் அறியேன்** !

## புதிய நிர்வாகிகளை வாழ்த்துகிறேன்.

**புதிய பிஷப்** தேர்தல் ஒரு வழியாக **செப்டம்பர்** மாதம் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதிலாவது **தெய்வ பயம்** உள்ளவர்களை தேர்ந்தெடுக்க தீர்மாணியுங்கள், குறிப்பாக முக்கியமாக **ஆயர்கள் தீர்மானிப்பார்களாக. ஆயர்கள்** ஓட்டு இதற்கு முக்கியம்.

### தெரிந்தெடுக்கப்படும் பிஷப்பின் தகுதிகள்

1 தீமோ 3:2 ஆங்கில வேதத்தில் **கண்காணி** என்பதற்கு **பிஷப்** என்று மொழி பெயர்த்துள்ளார்கள். டீ எஸ்டேட்டில் **மேஸ்திரியைகூட கண்காணி** என்று தான் அழைப்பார்கள்.

### தகுதி என்ன?

தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் **முன்னதாகச்** சோதிக்கப்பட வேண்டும் அவன் **குற்றஞ்சாட்டப் படாதவனுமாய்** இருக்க வேண்டும். அதனால் தான் பிஷப் பேனலில் ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்களின் **பெயர்களை** டையோசிஸ்ஸில் உள்ள அனைத்து CSI சபைகளிலும் எழுதி அறிவிக்க செய்ய வேண்டும் என்பது CSI சட்டம்.

**திருமணத்துக்கு** முன் மூன்று வாரங்கள் **ஓலை கூறுதல்** என்று சில இடங்களில் கூறுவார்கள். அதாவது **அறிவிப்பு** கூறுவார்கள். முதல் அறிவிப்பு, **இரண்டாம்** அறிவிப்பு **மூன்றாம்** அறிவிப்பு என்று திருமண தம்பதிகளின பெயர்கள் அவர் பெற்றோர் பெயர் அவர்கள் எந்த சபை அங்கத்தினர் இவைகளை மூன்று வாரங்கள் அறிவித்து இவர்கள்

**திருமணம் நடத்த கூடாதபடி வேத வசனத்து விரோதமான காரணங்கள்** இருந்தால் **அதை எழுத்து மூலம்** சபை **ஆயருக்கு தெரிவிக்க** வேண்டும் என்று அறிவிப்பார்கள். மூன்றாவது கடைசி ஓலை (அறிவிப்பு) கூறும்போது) இது இவர்களுக்கு மூன்றாம் அறிவிப்பு பெண் – மாப்பிள்ளையின் மேல் திருமணம் செய்யகூடாதபடி உள்ள தடைகளை **இப்போது அறிவிக்காமல் போனால்** இனி எப்போதும் **ஒருகாலும் அறிவிக்க கூடாது** என்று ஆயர் அறிவிப்பார். அதன்பிறகு தான் திருமணம் தாலி கட்டுதல் அல்லது மோதிரம் மாற்றுதல் நடக்கும்.

ஏறக்குறைய திருமண அறிவிப்பை போலவே பிஷப்பாக தேர்தெடுக்கப்பட்ட **ஆயர்கள் பெயரையும் மூன்று வாரங்கள்** டையோசிஸ்ஸின் அனைத்து சபைகளிலும் அறிவிக்க வேண்டும். அந்த ஆயர்கள் மேல் ஏதாவது **குற்றச்சாட்டு இருக்குமானால்** உடனே **எழுத்து மூலம்** ஆயருக்கு அறிவித்து குற்றச்சாட்டு உண்மை என்று நிரூபிக்கப்பட்டால் அந்த திருமணத்தையே நிறுத்திவிடலாம். அதுபோல பிஷப் எலக்ஷனையே நிறுத்திவிடலாம். அதாவது தீத்து 1:6-9ல் எழுதிய தகுதிகள் அவரில் காணப்படவேண்டும். அவர் **ஆவிக்குறியவராக** இருந்தால் மட்டும் போதாது கடந்த மாத ஜாமக்காரனில் நான் அறிவித்தது போல அவர் **நல்ல நிர்வாகியாகவும்** இருக்க வேண்டும். 9ம் வசனத்தில் **எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனாக இருக்க வேண்டும்.**

- ☐ சேலம் பிரபல CSI சபையில் தாலி கட்டும் சமயம் அந்த 3ம் அறிவிப்பு அறிவிக்கப்பட்டது. ஆயர் மாப்பிளளையிடம் கேட்டதுபோல பெண்ணிடமும் இவரை திருமணம் செய்து கணவனாக ஏற்றுக்கொள்ள சம்மதமா? என்று ஆயர் கேட்க மணப்பெண் சத்தமாக இவரை எனக்கு பிடிக்கவில்லை, நான் வேறு ஒருவரைதான் காதலித்தேன் என்றார். பெரும் அதிர்ச்சி இருவீட்டார்களுக்கும் ஏற்பட்டது. வேறு வழியில்லாமல் திருமணம் நின்றுபோனது. மாப்பிள்ளை – பெண் திருமண கோலத்திலேயே ஆலயத்தைவிட்டு வெளியேறினார்கள். பெரிய பணக்கார குடும்பம் அது. ஆனால் பெற்றோருக்கு தலைகுனிவை உண்டாக்கியது. விலைகூடிய பிரியாணி எல்லாம் அனாதை பிள்ளைகள் விடுதிக்கு அனுப்பப்பட்டதாக அறிந்தேன்.
- ☐ தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு **பிஷப் கமிட்டி சொல்வதற்கெல்லாம்** தலையாட்டிக்கொண்டு இருப்பவர்களாக இருந்தால், அவர் **சுயமாய் தீர்மானம்** எடுக்க தெரியாத பிஷப்பாக கருதப்படுவார். அல்லது பிஷப் தவறு செய்தவர்கள்மேல் நடவடிக்கை எடுக்க **தைரியமில்லாதவர்** என்று அர்த்தம். மேலும் அவர் நிர்வாகிகளுக்கு பயப்படுகிறார் அல்லது அவர்களுக்கு அடிமையாகிவிட்டார் என்று அர்த்தம். அப்படிப்பட்டவர்கள் **பிஷப்** பதவிக்கு **லாயக்கற்றவர்கள்.**

☐ மேலும் **பிஷப்** பதவி ஏற்றதும் **அவர் சொத்துக்கள்** பெருகுவதை நீங்கள் கவனித்து இருக்கலாம். அதனால் பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டவரின் அப்போதைய **சொத்து நிலவரம்** என்ன? சொந்தமாய் **எவ்வளவு வீடு** இருக்கிறது, **வங்கியில்** எவ்வளவு **பண சேமிப்பு** இருக்கிறது என்ற விவரங்களை **CSI சினட்டுக்கு** அந்த பிஷப் அறிவிக்க வேண்டும்.

இப்போது திருநெல்வேலியில் **பிஷப்பாக நிற்கப் போகிற** 3 நபர்களைப்பற்றிய விவரங்கள் குறித்து நான் கேள்விப்பட்டேன். அதில் **ஒருவரின் மகள் பெயரில்** எத்தனை வீடுகள் **மகன் பெயரில்** எத்தனை வீடுகள், கார்கள், **எங்கெங்கு நிலம்** வாங்கப்பட்டிருக்கிறது. அவர்களின் **வங்கி சேமிப்பு** இவைகளைப்பற்றி ஆதாரத்தோடு **விவரங்கள்** அனைத்தும் எனக்கு **அனுப்பட்டுள்ளது.** அந்த **ஆயர் வாங்கிய** சம்பளம் எவ்வளவு? அந்த சம்பளத்தில் **பிள்ளைகளுக்காக இவ்வளவு சொத்துகளும்** வாங்கி கொடுத்தது எப்படி? தன் பெயரில் **விலை உயர்ந்த** இரண்டு கார்களும் எப்படி இவர் தன் குறைந்த சம்பளத்தில் வாங்க முடிந்தது? இதற்கு பெயர்தான் **வருமானத்துக்கு மீறின சொத்துகள்,** வருமானத்திற்கு மீறிய **பண சேமிப்பு** என்று கூறுவார்கள். பழைய **தமிழ்நாட்டு முதல்வர்** இதில்தானே அகப்பட்டார். **மாதம் 1 ரூபாய்** சம்பளம் வாங்குகிறேன் என்று மக்களை கவர அறிவிப்பு கொடுத்துவிட்டு **தமிழ்நாட்டையே விலை பேசும்** அளவு இவருக்கு **பணம் எங்கிருந்து வந்தது** என்ற கேள்வியில் தான் **பெங்களூர் சிறையில்** அடைக்கப்பட்டு **100 கோடி அபராதம்** விதிக்கப்பட்டு தண்டனை அனுபவித்தார். செத்தார் !

இப்படிப்பட்ட நிலை **நம் பிஷப்மார்களுக்கு** உண்டாகாதபடி இருக்க **பிஷப் தேர்தலில்** ஜெயிக்க போகிற **ஆயர்களின் சொத்து கணக்கு** தங்கள் **பிள்ளைகள்,** மருமகன் உட்பட அனைத்து நபர்களின் **சொத்து அறிக்கை** தாக்கல் செய்யப்படவேண்டும். இப்படிப்பட்ட சொத்து அல்லது **விலை உயர்ந்த வாகனம்** விஷயத்தில் குற்றம் சாட்டப்படாதவர்களாக இருந்தால் **நெல்லை திருமண்டலத்தை** ஆவிக்குறிய வசன வழியில் முன்னுக்கு கொண்டுவருவார். ஒவ்வொரு சபையில் உள்ள **ஏழை பிள்ளைகள் லஞ்சம் கொடுக்காமல் வரிசை பட்டியல்** மாறாமல் அவர்களுக்கு **கல்லூரியில் அல்லது பள்ளியில் வேலை கிடைக்கும். அந்த ஏழை மக்கள் பிஷப்பை வாழ்த்துவார்கள்.** இதில் பட்சபாதம் காண்பிக்காமல் **ஒத்துழைக்கும் லே-செயலர்** முதல் மற்ற எல்லா **நிர்வாகிகளையும்** மக்கள் மனமார வாழ்த்துவார்கள் கர்த்தரும் அதில் மகிமைப்படுவார்.

Dr. புஷ்பராஜ் ஆகிய நானும் உயிரோடு இருந்தால் தெரிந்தெடுக்கப்படும் அப்படிப்பட்ட நல்ல **பிஷப்பை** பற்றி **மனதார வாழ்த்துவேன்** . கர்த்தருக்கு நன்றி கூறுவேன்.

☐ **டையோசிஸ் நிர்வாகம்** கோர்ட்டுக்கு போகாமல் இருந்தால் சபைகளும் **தங்கள் நியாயத்துக்கோ** தங்கள் பிள்ளைகளின் **மனைவிமாரின் வேலை** விஷயமாகவோ அல்லது **சீனியாரிட்டி ஒழுங்கு மாறாதிருக்குமானால்** அவர்கள் யாரும் **கோர்ட்டுக்கு**

**போக மாட்டார்கள்.** சபைகளும் **சமாதானமாக இயங்கும்** அவர்கள் நிர்வாகத்தில், **மிஷனரிமார்கள்** ஒவ்வொரு சபையிலிருந்தும் எழுப்பி இந்தியாவுக்கு இயேசுவை சுமந்து செல்வார்கள். **வக்கீல்களுக்கு** சபை அல்லது டையோசிஸ் பணம் வீனாக செலவு செய்யவேணடியிருக்காது.

☐ இப்போதைய CSI சபைகளின் **அவல நிலைக்கு** மற்றொரு உதாரணம். இதை எழுதிக்கொணடிருக்கும்போது தூத்துக்குடி - நாசரேத் CSI டையோசிஸ் தேர்தல் நடைபெறபோகிறது. அது சம்பந்தமாக நடந்த சாட்சிகெட்ட சம்பவங்களை கேளுங்கள். டையோசிஸ்ஸில் **லே-செயலர்** பதவி என்பது இப்போது **பிஷப்** பதவியைவிட **சக்தி வாய்ந்ததாக** மாறிவிட்டதை எனபதை வாசகர்கள் அறிவார்கள். பிஷப் அவர்கள் பல இடங்களில் வெரும் **டம்மியாகத்தான்** பதவி வகிக்கிறார்கள். தூத்துக்குடி டையோசிஸ்ஸில் நிரந்தர லே-செயலராக பதவி வகித்த திரு. **எஸ்.டி.கே.ராஜன்** அவர்கள் 3வது முறையாக தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால் அவர் சார்பில் ஆடிட்டர் ஜெயசந்திரன் என்பவர் லே-செயலர் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

இந்த பலம் வாய்ந்த அணியை எதிர்த்து மற்றொரு **தொழிலதிபரான D.S.F.** என்பவர் லே-செயலர் **வேட்பாளர்களாக** அறிவிக்கப்பட்டார். இவர் **D.S.F.** கம்பெனியின் முதலாளியாகும். திரு.**துரைராஜை லே - செயலாளர்** - வேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன். அவரது **பெயரை** வாக்காளர் லிஸ்டிலிருந்து நீக்கிவிட்டார்கள். உடனே திரு. **துரைராஜ்ஜின்** தம்பி மருமகன் திரு. **பிரேம்** என்பவரை லே-செயலர் வேட்பாளராக நிறுத்த ஏற்பாடுகள் நடந்தது. இதையும் அறிந்த டையோசிஸ்ஸின் **S.T.K. ராஜன்** அவர்களோடுள்ள நிர்வாகிகள் திரு. **பிரேம்** பெயரையும் வாக்காளர் லிஸ்டிலிருந்து **நீக்கிவிட்டனர்.** உடனே இப்போதுள்ள லே-செயலர் **S.T.K.**¨ ராஜன் அணிக்கு எதிராக **திருமண்டலம் நலம் காக்கும் அணி** என்ற பெயரில் **ஒரு அணி** உருவாக்கப்பட்டது. இந்த அணியின் சார்பாக திரு. **S.T.R. பொன்சீலன்** என்பவரை நிறுத்த ஏற்பாடானது. இதை கேள்விப்பட்ட உடனேயே **S.T.R.** பொன் சீலன் என்பவரின் **பெயரையும் வேட்பாளர்** லிஸ்டிலிருந்து **நீக்கிவிட்டனர்.**

இதுவரை **வாக்காளர் லிஸ்டிலிருந்து 3 நபர்களின்** பெயர்கள் தூக்கி எறியப்பட்டது. அதோடு நிற்கவில்லை, இந்த **புதிய அணியை** யார் யார் ஆதரித்தார்களோ அவர்களில் முக்கிய நபர்கள் **75 பெயர்களை** ஆனாவிசயமாக கரணம் ஏதும் இல்லாமல் சபை அங்கத்தினர் லிஸ்டிலிருந்து நிக்கிவிட்டனர்.

இவர்களை ஆதரித்த நபர்கள் **பண்டாரவிளை** என்ற ஊரில் உள்ள 200 **நபர்களின் பெயர்கள்** சபை பெயர் **பட்டியலிலேயே இல்லாதபடி** நீக்கிவிட்டனர். அப்படியே **நாசரேத்** என்ற ஊரில் CSI சபையில் உள்ள சுமார் 400 **நபர்களின்** பெயர்களும் நீக்கிவிட்டனர். இவர்களெல்லாம் டையோசிஸ்ஸை **ஆளும் நிர்வாகத்துக்கு** எதிராக உள்ளவர்களை **ஆதரித்த பெரும் குற்றத்திற்காக** நீக்கப்பட்டதாக கூறுகிறார்களா.

இவர்களெல்லாம் நீக்கப்பட்டதின் காரணம் பல வருடங்கள் டையோசிஸ் **நிர்வாகிகளாக இருந்த பெரும் முதலாளிகளை** எதிர்க்கும அணியினராக இவர்கள் கருதப்பட்டதுதான் காரணம் என்கிறார்கள.

தொடர்ந்து பலவேறு இடங்களில் **வாக்காளர் லிஸ்டிலிருந்து** ஆயிரக்கணக்கில் பெயர்கள் நீக்கப்பட்டது. இவர்கள் யாவரும் **சபையில்** பல ஆண்டுகளாக பரம்பரையாக **(சந்தா) வரிகொடுத்து** அங்கத்தினராக வாழ்ந்துவந்த சந்ததிகளாகும்.

ஆனால் இவர்கள் யாரும் **நீதிகேட்டு** நீதிமன்றம் போகாமல் சாத்வீக முறையில் **டையோசிஸ் அலுவலகத்தை** முற்றுகையிட்டு இவர்கள் செயல் **அக்கிரமாகும்** டையோசிஸ்ஸில் பெரும் **அநியாயம்** நடக்கிறது என்று பதாகைகள் பிடித்துக்கொண்டு போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இத்தனை சம்பவங்கள் அடுத்து அடுத்து நடந்தும் **தூத்துக்குடி** டையோசிஸ் **பிஷப்** அவர்கள் மிக **அமைதியாக இருக்கிறார்.** ஆனால் குறிப்பிட்ட நபர்களின் **பெயர்கள் நீக்கப்பட்டதில்** டையோசிஸ் **சட்ட சம்பந்தமான சில காரணங்கள்** உண்டு, அதை குறித்து இந்த கட்டுரையின் முடிவில் எழுதுகிறேன்.

ஆனால் அனைத்து C.S.I. லூத்தரன் சபைகளில் **தேர்தல் வரும் போதெல்லாம் வாக்காளர் லிஸ்டில்** பெயர் நீக்கம் என்பது ஏறக்குறைய **அனைத்து** சபைகளிலும் டையோசிஸ் **தேர்தல்களிலும்** தொடர்ந்து நடைபெற்று வருகிற சம்பங்களாகும் பல இடங்களில் **இது சம்பந்தமாக நீதிமன்றம் சென்றவர்களை** கோர்டே வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்டவர்களை **திரும்பவும் சபையில் சேர்த்து** அதன் விவரத்தை ஒரு **வாரத்தில்** கோர்ட்டுக்கு அறிவிக்க வேண்டும் என்ற நீதிபதி தீர்ப்பு கூறி **பிஷப்மாரை** நீதிபதிகள் **கண்டித்தும்** இருக்கிறார்கள்.

சிலவற்றுக்கு வாக்காளர் லிஸ்டிலிருந்து சிலர் நீக்கப்பட்டதற்கு **நியாயமான காரணம்** இருந்தாலும் **பெரும்பாலான** சபைகளில் **வாக்காளர் லிஸ்டில் குறிப்பிட்ட நபர்கள் கமிட்டியில் வந்துவிடக்கூடாது** என்பதும், **பழிவாங்கவேண்டும்** என்ற எண்ணத்திலும் **பெயர் நீக்கம்** சர்வ சாதரணமாக நடைபெறுகிறது. இதில் ஒரு சிலர் மட்டும் நீதிமன்றம் சென்று **வெற்றி பெற்று** மறுபடியும் சபை அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

## எனக்கு ஏற்பட்ட அனுபவம்

சேலத்தில் **என் சபையில்** எனக்கே இப்படிப்பட்ட **பெயர் நீக்கம் அனுபவம்** நடந்தது. இத்தனைக்கும் நான் **சபை அரசியலில்** தலையிடுவதில்லை. என் சபையில் நடந்த ஒரு **எலக்‌ஷனிலும் ஓட்டே போட்டது** கிடையாது.

குறிப்பாக **பிரசங்கிமார்களாக, ஊழியர்களாக** இருப்பவர்கள் **சபை பிரச்சனையில்** தலையிட கூடாது என்பது என் கொள்கை. நான் **அனைத்து சபைகளிலும்** ஊழியம் செய்பவன், அடிக்கடி நான் **சேலத்தில் இருக்கும்** நாளில் சேலத்திலுள்ள நான்கு C.S.I. சபைகளிலும் **கன்வென்ஷன்களில்** தொடர் பிரசங்கம் செய்ய அழைக்கப்பட்டவனாகும். இதில் ஒரு C.S.I. சபை என் ஊழியத்துக்கு காணிக்கை கொடுத்து உதவுபவர்களாகும். சபையில் உள்ள யாரையும் நான் பகைத்து கொண்டது கிடையாது. கடந்த 80 வருடங்களாக நாங்கள் சேலம் ஜங்ஷன் சபையில்தான் குடும்பமாக போய் வருகிறோம்.

நான் **ஊழியத்துக்கு** வந்த உடன் வருடத்தில் எல்லா வார நாட்களிலம் **இந்தியாவின்** பல்வேறு **மாநிலங்களில்** கன்வென்ஷனுக்காக நான் சென்று வருவதால் எல்லா **ஞாயிற்றுக்கிழமைகளிலும்** சொந்த ஊரான **சேலத்தில்** நான் இருப்பதில்லை. வாரத்தில் **இரண்டு நாட்கள்** மட்டும் **செவ்வாய் புதன்** நாட்களில் மட்டும் வீட்டில் இருப்பேன். C.S.I.யில் சில டையேசிஸ்களில் ஒரு சபை அங்கத்தினன் **குறைந்த பட்சம்** வருடத்துக்கு **மூன்று முறையாவது திருவிருந்து** அவரவர் சபையில் கைக்கொண்டிருக்க வேண்டும் என்பது சட்டம். அதற்காகவே மலை ஊழியத்துக்கு நான் செல்லும் நாட்களில் 6 நாட்கள் **மலை பிரதேச** ஆதிவாசிகளிடையே சுவிசேஷ ஊழியம் முடித்துவிட்டு **சனிக்கிழமை** வீடு வந்து சேருவேன். மறுநாள் **ஞாயிறு** ஆராதனையில் **திருவிருந்தில்** பங்குகொண்டு குறைந்தது **நான்கு முறை** திருவிருந்தில் பங்கு கொள்வேன்.

மாத சந்தா (வரி) = **மாத சந்தா** மாதா மாதம் ஆலயத்துக்கு நான் நேரில் வந்து சமர்பிக்க இயலாதாகையால் **ஒரு வருட சந்தாவை** (வரி) முன்னதாக செலுத்திவிடுகிறேன் என்று சபை **ஆயருக்கும்** கமிட்டியினருக்கு கடிதம் மூலம் எழுதி அனுமதி பெற்று **சந்தா பாக்கி** எதுவும் இல்லாமல் கவனமாக பார்த்துக்கொள்கிறேன்.

புதிய ஆயராக **Rev. மில்லர்** என்பவர் என் சபையின் பொருப்பேற்றார். **சபை தேர்தல் வந்தது அங்கத்தினர் லிஸ்டில் இருந்து என் பெயர் நீக்கப்பட்டிருப்பதை** பலர் என்னிடம் அறிவித்தனர். எனக்கு ஆச்சரியமாய் போனது. மேலும் என் பெயர் லிஸ்டில் இருந்தாலும் நான் **எலக்ஷனில்** நிற்கபோவதுமில்லை. எலக்ஷனல் நிற்பவர் யாராக இருந்தாலும் நான் அவர்களை **அதரிப்பதோ எதிர்பதோ இல்லை.** யாருக்கும் **சிபாரிசும்** செய்வதுமில்லை. இப்படியிருக்க நான் ஆலயத்தில் அங்கத்தினனாக இருப்பது **யாருக்கு** பிடிக்கவில்லை என்பதும் அல்லது **மேலிட கட்டளையா** என்பதும எனக்கு விளங்கவில்லை. விவரம் அறிய ஆயர் வீட்டுக்கு நானே நேரில் சென்று என் பெயர் நீக்கப்பட்டதின் காரணத்தை கேட்டேன். மிக நீண்ட தயக்கத்திற்கு பிறகு சேலத்தில் உள்ள 4 C.S.I. சபைகளிலும் உங்களை பயன்படுத்துகிறார்கள். நான்கு சபைகளுக்கும் விசேஷ சமயங்களில் காணிக்கை கொடுக்கிறீர்கள். ஆகவே என் **அங்கத்தினர் உரிமை** சேலத்தில் உள்ள இந்த **நான்கு**

C.S.I. சபையில் எந்த C.S.I.க்கு நீங்கள் **தேர்தல் உரிமை பெற்றவர்** என்பதை மற்ற மூன்று C.S.I. ஆயர்களிடம் கடிதம் எழுதிகொண்டு வாருங்கள் என்றார்.

**ஆயர்** அவர்களிடம் தம்பி (அவரை அங்கி போடாத சமயத்தில் நான் **தம்பி** என்றுதான் அழைப்பேன்) நான் **பிறந்த நாள்** முதல் என் பெற்றோர் **குடும்பம் யாவரும்** இங்குதான் வருகிறோம் என்பது உங்களுக்கே தெரியும். **என் தகப்பனார்** இதே ஆலயத்தில் 30 வருடங்கள் **செயலாளராக** ஊழியம் செய்தார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். (அப்போது நான் டாக்டர் பணியும் செய்து கொண்டிருந்தேன்)

நான் சேலத்தில் உள்ள எந்த C.S.I. சபையிலும் ஓட்டு போட்டது கிடையாது. அப்படியிருக்க என் பெயர் **நீக்கப்பட்டதின் காரணம் என்ன ?** என்றேன். ஒன்றும் தெரியாதவர் போல் சில புதிய சட்டங்களை கூறினார். இத்தனைக்கும் அந்த ஆயர் சேலத்தில் அவர் **சிறுபிள்ளையாய்** இருக்கும்போதே ஆலயத்தின் அருகேயே **குடியிருந்த அவருக்கு** என்னையும், என் குடும்பத்தையும், என் ஊழியத்தை பற்றியும் நன்றாக அறிவார். அவர் **இரட்சிக்கப்பட்ட ஆயர்** என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் இதற்குமுன் அவர் ஊழியம் செய்த ஆலயங்களில் அவர் அணுகுமுறையால் சபையில் உண்டான பிரச்சனைகளையும், என் விஷயத்தில் அவரில் நடந்த **திடீர் மாற்றங்களையும்** அறிந்தபோது அவரின் ஆவிக்குரிய ஜீவியம் **பொய்யானது** என்று உணர்ந்தேன். பல வருடங்களாக எங்கள் குடும்பத்தினருக்கு அவர்மேல் இருந்த நல்ல அபிப்ராயம் கெடுக்கப்பட்டது. அதன்பின் நான் அவரை சந்திப்பதையும் நிறுத்திவிட்டேன். சில வாரங்களில் சபை தேர்தல் நடந்து முடிந்த உடன் என் பெயர் மறுபடியும் சேர்க்கப்பட்டதாக அறிந்தேன்.

இப்படி பெரும்பாலான சபைகளில் தேர்தல் சமயத்தில் பல காரணங்களால் **பெயர் நீக்க** பிரச்சனை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. **குடிகாரர்கள்,** இரண்டு மனைவி **உடையவர்களுக்கு** இந்த குறிப்பிட்ட **ஆயர்** திருவிருந்து கொடுத்து **சபையில் பதவியையும்** கொடுத்து கொளரவித்திருக்கிறார்.

பல இடங்களில் **பதவி** வெறியும் பழிவாங்குதலும்தான் அங்கத்தினர் பெயர் நீக்கத்க்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இதற்கு முக்கிய காரணம் **பிஷப்** பதவியில் உள்ளவர்கள் **பண பலம்** உள்ள ஒரு குறிப்பிட்ட சாரார்பக்கம் **சாய்ந்துவிடுகிறார்கள்.** அதற்கான **பயன்களும்** அந்த **பிஷப்**மார்களுக்கு கிடைத்துவிடுகிறது.

## திருநெல்வேலி CSI டையோசிஸ்ஸில் புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகிகளுக்கும் – புதிய பிஷப் அவர்களுக்கும் ஆலோசனை

**டையோசிஸ்களில் ஆசிர்வாத தட்டு** என்ற புதிய பழக்கம் கர்த்தருக்கே **லஞ்சம் கொடுக்கும்** ஏற்பாடு ஆகும். அது **அறவே நீக்கப்பட வேண்டும்.**

**திருநெல்வேலி** டையோசிஸ்ஸில் உள்ளவர்கள்தான் **ஆயிரக்கணக்கில் மிஷனரி** மார்களையும், **என்னைப்போல் உள்ள ஊழியர்களையும்** மிகவும் அதிகம் தாங்குகிறவர்களாக இருக்கிறார்கள். நம் திருமண்டலத்தின் எண்ணங்கள் **மிஷனரி ஊழியங்கள்பக்கம்** திரும்புமானால் **திறப்பின்** வாசல், **வானத்தின்** வாசல், **ஜெப கோபுரங்கள்** இப்படிப்பட்ட **வியாபார ஊழியங்கள்** பக்கமே திருமண்டல மக்கள் போகமாட்டார்கள். சபைகளிலேயே **உபவாச ஜெபம்** பெருகும் **முழு இரவு ஜெபம்** பெருகும்.

அப்போது கர்த்தர் திருநெல்வேலி டையோசிஸ் சபை மக்கள் அனைவரையும் நிச்சயமாக ஆசிர்வதிப்பார். நானும் **திருநெல்வேலி** CSI டையோசிஸ்காகவும் பிஷப் **தேர்தலுக்காகவும்** தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறேன்.

இனி CSI சபை மக்கள் **சபையில் இடும் காணிக்கை பணத்தை** வக்கீல்களின் செலவுக்கோ, **நீதிமன்ற செலவுக்கோ செலவழிக்காமல்** மிஷனரி ஊழியங்களை ஊக்கப்படுத்தவும், **வீடில்லா ஏழை சபை அங்கத்தினர்களுக்கு** வீடு கட்டுதல், **குடி தண்ணீர்** வசதி செய்து கொடுத்தல், **ஏழை களுக்கான ஆபரேஷன் செலவுகளை** ஏற்பது, ஏழை பிள்ளைகளின் **படிப்பு செலவுக்கான பண உதவிகள்** செய்தல் சபையில் வறுமைகோட்டுக்கு கீழே உள்ளவர்களின் பிள்ளைகளுக்கு டையோசிஸ் ஸ்தாபனங்களில் பள்ளி, கல்லூரிகளில் வேலை வாய்ப்பை வழங்குவது போன்ற நல்ல சேவை மனப்பான்மையோடு செயல்படட்டும்.

கர்த்தருடைய சமாதானம், கிருபை **நெல்லை திருமண்டல** CSI **சபைகளின்** புதிய பிஷப், புதிய நிர்வாகிகள் மீது என்றென்றும் நிலைத்திருப்பதாக ! என்று வாழ்த்துகிறேன்.

டாக்டர் **புஷ்பராஜ்**

# ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# ஜெபித்தது போதும் !

- Bro R. STANLY, Vellore

(இந்த கட்டுரை எழுதிய சகோ. **R. ஸ்டான்லி** அவர்கள் BYM மிஷனரி ஸ்தாபனத்தின் **ஸ்தாபகரும்** நல்ல **வேத பண்டிதருமாகும்.** ஆனால் இதில் எழுதிய சில வித்தியாசமான கருத்துக்களை சிலர் கிரகிக்க முடியவில்லை என்று அறிந்தேன். ஆனால் பெரும்பாலானவர் இவர் கருத்தை வரவேற்றார்கள். மேலும் இந்த கட்டுரை வெளியாகும் முன்னே சத்தியம் TVயிலும் You-tubeபிலும் 30 நாள் உபவாசம், 100 நாட்கள் **முழுஇரவு** ஜெபம் நடத்தும், அன்னிய பாஷை என்ற பெயரில் உளருபவர்கள் தங்கள் கூட்டங்களில் சில ஊழியர்கள் ஜெபிக்காதே என்றும், இப்படிப்பட்ட உபவாச ஜெபங்கள் வேண்டாம் என்று கூறுகிறார்கள். ஜாக்கிறதை, அவர்கள் கூறுவதை கேட்க வேண்டாம் என்று முன் எச்சரிக்கையாக தங்கள் கூட்டங்களில் அறிவித்ததாக நான் அறிந்தேன். அந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்காக நான் வருந்துகிறேன்.)

நமது ஜெபங்களெல்லாம் என்னவாயின ? நமக்குத் தெரிந்த ஒருவர் கரோனா நோய்த் தொற்றினால் **மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்** என்றொரு ஜெப வேண்டுகோள் முதலில் வருகிறது. **அடுத்த சில நாட்களில் அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி வருகிறது.** விசுவாசிகளோ அவிசுவாசிகளோ, முழுநேர ஊழியரோ பகுதிநேரப் பணியாளரோ, ஏறெடுக்கப்பட்ட **ஜெபங்களுக்கு வரும் பதில்களில் பெரிய வித்தியாசம்** ஒன்றுமில்லை. **தொலைக்காட்சி** TV அல்லது **zoom** வாயிலாகப் பிரசங்கிக்கும் **பிரசங்கிமாரும், திருச்சபைகளும், மிஷனரி இயக்கங்களும்** ஏராளம் **ஜெபங்கள்** நடத்துகின்றன. **நமது ஜெபங்களைத் தேவன் நிசமாகவே கேட்கிறாரா?** "என்னதான் நடக்கிறது?" "உன்னதமானவர் உன்னைப் பாழாக்கும் **கொள்ளை நோய்க்குத்** தப்புவிப்பார்"என்று சங்கீதக்காரனின் கூற்று என்னவானது? (சங் 91:3ஆ). இவ்விதக் கேள்விகள் மனதில் மோதாத கிறிஸ்தவர் எவருமில்லை. **இவற்றிற்கெல்லாம் பதில் இல்லாது தேவன் நம் ஜெபத்தை கேட்காமலும் பதில் அளிக்காமலும் சும்மா இருக்கிறாரா?** என்பதே எனது கருத்து. **நல்ல** நாட்களிலோ **தீய** நாட்களிலோ தேவன் நம்மைத் தவிக்கவிடவில்லை என்பதே எனது கருத்து. நல்ல நாட்களிலோ, தீய நாட்களிலோ **அறிந்துகொள்ள தேவையானது அத்தனையும்** அவரது எழுதப்பட்ட **வார்த்தையாகிய பைபிளில் உண்டு.**

## ஜெபங்களும் தர்மங்களும் (Prayers & Aims)

**கொர்நேலியு ஒரு கிறிஸ்தவ விசுவாசியாயிருந்தார் என்று சொல்லமுடியாது.**

ஆனால் அவரிடம் **தெய்வ பயம்** இருந்தது, அவ்வளவுதான். அவர் ஓர் **இத்தாலியப் படையதிகாரி.** மதிய உணவைத் தவிர்த்துப் உபவாசித்து பிற்பகலில் **ஜெபித்துக்கொண்டிருந்தார்.** மூன்று மணியளவில் திடீரென்று **ஒரு தேவதூதன்** அவருக்குத் தரிசனமாகிச் சொன்னது. **"உன் ஜெபங்களும் தர்மங்களும்** தேவனுக்கு நினைப்பூட்டுதலாக **அவரது சந்நிதியில் வந்து எட்டியிருக்கின்றன"** (அப். 10:1-4). அதன்பின் கொர்நேலியுவின் அழைப்பின் பேரில் நான்கு நாட்களுக்குப் பின்னர் தனது வீட்டிற்கு வந்த **அப்போஸ்தலன் பேதுருவிடம்** கொர்நேலியு இதே வார்த்தைகளைச் சொன்னார். அவர் சொன்னது: "நான்கு நாட்களுக்கு முன்னர் இதே வேளையில் பிற்பகல் மூன்று மணியளவில் என் வீட்டில் நான் உபவாசித்து ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது பிரகாசமுள்ள ஆடையணிந்த ஒருவர் எனக்குமுன் நின்று: 'கொர்நேலியுவே, உன் **ஜெபம்** கேட்கப்பட்டது, உன் **தான தர்மங்கள்** தேவ சந்நிதியில் நினைத்தருளப்பட்டன' என்றார்" (வச. 30,31). ஆம், பிரியமானவர்களே, இங்குதான் இரகசியமே இருக்கிறது: **ஜெபங்கள்** மட்டுமல்ல, ஜெபங்கள் **அத்துடன்** தர்மங்கள்! ஆகியவைகள் தான் பேதுரு **பிரசங்கம்** முடியுமுன்னரே குடும்பத்தார் அனைவர் மீதும் **தேவன் தமது ஆவியை ஊற்றிவிடும்வளவு** கொர்நேலியுவைத் **தேவனுக்கு பிடித்திருந்தது**! (வசனம் 44-46 ). ***"ஜெபமே ஜெயம்"! எ***ன்றொரு பிரபலமான சுவர் வாசகம் உண்டு. இதில் பாதி தான் உண்மை. **"ஜெபமும் தான தர்மமுமே சரியான ஜெயம்"!** என்று இது மாற்றியெழுதப்பட வேண்டும். கொர்நேலியு " **எப்போழுதும்** ஜெபம் பண்ணிக்கொண்டு இருந்தார்"(வச. 2). இது நமது சங்கிலி **ஜெபம் போன்றது.** அத்துடன் அவர் "***மிகுந்த*** **தர்மங்கள்செய்து கொண்டிருந்தார்". இரண்டும் சம முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.** நமது இப்போதைய **ஜெப கூட்டங்களில்** மேலே நான் கூறியதைப்பற்றிய **பேச்சே இல்லையே!** நமது ஜெபங்கள் பரலோகத்தில் சென்று **அடையாதது** ஆச்சரயமா?

## செய்ய தவறியவை என்னும் பாவங்கள் (sins of Omission)

மக்கள் "மிகுதியாய் ஜெபம்" பண்ணினாலும் தேவன் பதில் கொடாதிருப்பதற்கான காரணத்தை **குட்டி பைபிள்** எனப்படும் **ஏசாயா புத்தகத்தின்** 66 அத்தியாயங்களில் முதலாம் அத்தியாயங்களில் தீர்க்கன் ஏசாயா குறிப்பாய் சொல்லுகிறார். (ஏசா 1:15). திருச்சபையானது **உலகம்** முழுவதிலும், **TV யிலும், குழுக்கலாயும்**, வீடுகளிலும் இந்த அளவு மிக அதிகமாக ஜெபம் **ஏறெடுக்கச் செய்ததை** எனது வாழ்நாட்களில் இதுவரை நான் கண்டதில்லை. ஆனாலும் நிலைமை **இன்னும் மோசமாகிக்கொண்டுதானே** இருக்கிறது? **நோய்த்தொற்றின் முதல் அலையின்போது** அதிகரிக்கப்பட்ட ஜெபங்கள் **இரண்டாம் அலை வருவைதைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே ஏன்?** இதோ **மூன்றாம் அலை வாசலுக்கு வந்துவிட்டது** .குறிப்பாக **தமிழ்நாட்டில்தான்** மிக அதிகமான ஜெபத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும், இந்தியாவிலேயே கொரோனா என்ற **இந்நோய்த்தொற்றுப்** பாதிப்பு

அதிகம் இங்குதான். **ஏசாயா** மூலம் தேவன் அன்று கொடுத்த செய்தியே இன்றைக்கு அவர் நமக்குத் தரும் திட்டமான வார்த்தை என்பதே எனது உறுதியான எண்ணம். இரு காரியங்களை நாம் செய்யவேண்டுமென தேவன் விரும்புகிறார்: "**தீயது** செய்வதை விட்டொழியுங்கள்" அத்துடன் "**நல்லது** செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்" (வச 17,18). முதலில் வருவது "**செய்யத் தகாதவை** எனும் பாவங்கள்" (sins of commission) ஆகும்.

அடுத்தது "**செய்யத் தவறிவை** எனும் பாவங்கள்"(sins of omission) .

ஜெபத்திற்காய் இருதயத்தை ஆயத்தப்படுத்துதல் என்பது செய்யத் தகாதவை எனும் பாவங்களை மட்டுமல்ல, செய்யத் தவறியவை எனும் பாவங்களையும் அறிக்கையிட்டு அவற்றிலிருந்து மனந்திரும்புவதாகும். செய்யத் தவறியவை எனும் பாவங்களில் ஒரு சிலவற்றைத் தேவன் 17ஆம் வசனத்தில் பட்டியலிடுகிறார்: "**ஒடுக்கப்பட்டோருக்கு உதவுங்கள்** ; **திக்கற்றோருக்கு** நீதி வழங்குங்கள்; **விதவைக்காய்** வழக்காடுங்கள்." இவைகளைச் செய்யத் தவறுவதுதான் "**கடுஞ்சிவப்பான பாவங்கள்**" மற்றும் "**இரத்த நிறப் பாவங்கள்**" என்கிறார் அவர். (வச. 18). **செய்யத்தகாதவை** எனும் பாவங்கள் எதனையும் இவ்வசனப்பகுதியில் தேவன் சுட்டிக்காட்டாமல், **செய்யத் தவறியவை** எனும் பாவங்களை மட்டுமே பட்டியலிடுகிறார். இவையனைத்தும் **தான தர்ம** ஈவிரக்கத்தை குறித்ததாகும். வேறு வார்த்தைகளில் சொன்னால், **தானதர்மம் இல்லாத** ***ஜெபத்தைத் தேவன் வெறுக்கிறார்.*** அவ்வித ஜெபங்களைக் கேட்டு அவர் களைத்துப்போனார் (வச. 14,15) . தேவையிலிருப்போரை நோக்கி **உதவிக்கரம் நீட்டாது**, அடிக்கடி தேவனை நோக்கிக் **கரம் உயர்த்துவது** அர்த்தமற்றது .

## வாசமற்ற உபவாசம் (Flavourless Fasting)

இன்றையக் காலக்கட்டத்தில் எல்லா இடங்களிலும் **ஜெபங்கள் பெருகிவிட்டன. உபவாசித்து செய்யும்** ஜெபத்துக்குதான் இன்று **விளம்பரம்** அதிகம். அதனைக் குறித்து நான் இங்கு அதிகம் பேச விரும்பவில்லை. ஆனாலும், தான தர்மத்தினை உபதேசத்திலும் செயல்பாட்டிலும் போதுமான அளவு வலியுறுத்தாத **உபவாச ஜெபங்களை** ஆண்டவர் **சகித்துக்கொள்ள மாட்டார்.** உணவையோ நியாயமான அனுபோகங்களையோ அகற்றுவது மட்டும் அவருக்குப் பிரியமான உபவாசமாகிவிட்டது. மாறாக, "கொடுமைத் **தளைகளை** அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும், **ஒடுக்கப்பட்டோரை** விடுதலையாக்கி அனுப்புவதும், எவ்வித நுகத்தையும் உடைப்பதும், **பசித்தோருக்கு** நமது உணவைப் பகிர்வதும், **உறைவிடமற்றோரை** நமது இல்லத்திற்கு அழைத்து வருவதும், **உடையற்றோரை** உடுத்துவிப்பதும்தான்" நமது ஆண்டவருக்கு **வாசமாயிருக்கும்** (ஏச.58:5-7). இந்த வசனப்பகுதியை **எந்த உபவாச ஜெபத்திலாவது** பிரசங்கியார் வியாக்கியானிப்பதைக் கேட்டிருக்கிறீர்களா? **இல்லாதோரை** ஆசீர்வதிக்கும்படிக்கு

**பங்குபெறுவோரை அனுப்பிவைக்கும் உபவாச ஜெபக்கூடுகை உண்டோ?** தேவன் தந்துள்ள இவ்வேழு **நிவாரணப்பணியை** மேற்கொள்ள உங்களுக்கு விருப்பமில்லையேல், **உபவாச ஜெபத்தை நிறுத்திவிடுங்கள்!** என்னிடம் கோபப்படாதீர்கள்! **ஏசாயாவை உயிரோடெழுப்பி** அவருடன் **வாக்குவாதம் பண்ணுங்கள்!** தேவன் சொல்லியுள்ள இவற்றைச் செய்தால் "**சீக்கிரம் சுகம்** வரும்" (வச 8).

## சகோதரி சோதோம் (Sister Sodom)

ஜெபக்கூடுகைகளில் நாட்டிற்காகவும், உலகிற்காகவும் ஜெபிக்கும்போது அடிக்கடி மேற்கொள் காட்டப்படும் வசனம் 2 நாளாகமம் 7:14, "எனது பெயரால் அழைக்கப்படும் என் மக்கள் **தங்களைத் தாழ்த்தி**, ஜெபம்பண்ணி, தங்களது **பொல்லாத வழிகளை** விட்டுத் திரும்பினால், விண்ணகத்திலிருக்கும் நான் அவர்களது **பாவத்தை** மன்னித்து , அவர்களது நாட்டிற்கு நலம் அளிப்பேன்". **நகர்கள்** மற்றும் **பட்டணங்களின்** நடக்கும் பாவங்கள் மற்றும் தீய வழிகளைக் குறித்துப் பேசும்போது நமது நினைவுக்கு உடனே வருவது **சோதோம்** நகர்தான். **சோதோமின் பாவம்** "மிகவும் கொடியது" என்று ஆபிரகாமிடம் தேவன் கூறினார் (ஆதி18:20). ஆபிரகாம் தொடர்ந்து தேவனிடம் மன்றாடியும் அந்நகரைக் காக்க முடியவில்லை (வச. 22-33) **அளவுக்கு மீறிய அக்கிரமத்திற்கு** சோதோம் நகரையே **இயேசுவானவர்** எடுத்துக்காட்டாய்க் கூறினார் (லூக் 10:12). அப்போஸ்தர் பவுல், பேதுரு, யூதா, யோவான் ஆகியோரும் அப்படியே குறிப்பிட்டனர் (ரோ. 9:29, 2 பேது 2:6, யூதா 7, வெளி11:8). **சோதோமின் பாவம்தான்** என்ன? அதற்கான பதிலைத் தருவது எசேக்கியேல் 16:49, "கர்வம், பெருந்தீனிப் பிரியம், சோம்பல் **ஆகியவையே உன் சகோதரியாகிய சோதோமின் அக்கிரமம், ஏழை எளியோரின்** கைகளை **அவள் வலுப்படுத்தவில்லை**". சக மனிதனின் வறுமையைக் குறித்துக் கவலைப்படாது **சுகபோகமாய் வாழுதல்!**

**சோதோமில் பத்தே** நீதிமான்கள் இருந்தாலும் அதனை அழிப்பதில்லை என்று ஆபிரகாமுக்குத் தேவன் உறுதியளித்தார். (ஆதி 18:32). **ஐயகோ! தயாளமாய்க் கொடுப்போரின் எண்ணிக்கை** நமது சபைகளில் இவ்வளவு அதிகமாக குறைந்துவிட்டதோ? நண்பரே, இந்தப் "**பத்துப்பேரில்**" நீங்கள் ஒருவராகிவிடவேண்டும் என்ற சவாலை ஏற்பீர்களா?

## திறப்பின் வாசல் (Standing in the Gap)

"**திறப்பின் வாசல்**" என்பதே இன்று கிறிஸ்தவப் பெருமக்களுக்குச் சவால்விட்டு மன்றாட்டு ஜெபத்திற்கு அழைக்கும் **கவர்ச்சி சொற்களாகும்**. எசேக்கியேல் 22:30 லிருந்து இச்சொற்றொடர் எடுக்கப்பட்டுள்ளது. "நான் நாட்டினை அழிக்காதபடித் **திறப்பில் நிற்கவும்,** சுவரொன்று எழுப்பித் தடுக்கவும் முன்வரும் ஒரு மனிதனைத் தேடினேன்; ஒருவரும் கிடைக்கவில்லை! "வழக்கம்போல் இவ்வசனத்தையும் **அதன் சூழமைவிலிருந்து** (context)

**பிரித்து எடுத்துவிட்டோம்.** வசனங்கள் 27 முதல் 29 வரை வாசித்துப் பாருங்கள். "**அநியாயச் சம்பாத்தியம். ..... ஏழை எளியவரை** துன்புறுத்தல்..... **அந்நியரை** இழிவாய் நடத்துதல்" போன்றவற்றிற்குப் பேர்போன **தலைவர்கள், தீர்க்கர்கள், பொதுமக்கள்** ஆகியோருக்கு **எதிராய் ஆண்டவர் சீற்றம் கொண்டார்.** அவர்கள்மீது தமது கோபக்கனலை ஊற்றி அவர்களை அழித்துவிட ஆயத்தமானார் (வச. 31) . **இப்பேரழிவைத் தடுத்து** நிறுத்த எவனாவது முன்வந்து **உடைப்பில் நின்று** ஒரு **சுவர் எழுப்பிவிடமாட்டானா** என்று இரக்கமுள்ளஆண்டவர் தாமதித்து நின்றார் (வச. 30) **ஒருவனும் கிடைக்கவில்லை.**

பிரியமானவர்களே, **இவ்வசனப்பகுதி தரும் செய்தி** என்னவென்று இப்பொழுது விளங்கிவிட்டதா? **"திறப்பின் வாசலில் நிற்பது"** என்றால், பல மணி நேரங்கள் **ஜெபத்திற்காய் "முழங்காலிடுதல்"** (kneeling)**அல்ல;** மாறாக, **தொண்டினைத்** தொழிலாக்கியுள்ள பிரசங்கிமார் மற்றும் **பணப் பைத்தியம் பிடித்த சபைத் தலைவர்களுக்கு** எதிராக ஏழை, எளியோர் சார்பில் **குரல் கொடுக்கும்படி "எழுந்து நிற்றல்"** (standing) **ஆகும். அது நிவாரணப்பணித் திட்டங்களுக்காய்ப் பணம் திரட்டுவதாம்.**அது ஒதுக்கப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டோருடன் அடையாளப்படுத்திக்கொண்டு **அவர்களைத் தூக்கியெடுத்து** உயர்த்துதாம் (லூக் 4:18,19) **அது கிறிஸ்து** மற்றும் **அப்போஸ்தலர்போல** நமது **செல்வங்களைக் காலியாக்கி** இல்லாதோரைச் செல்வர்களாக்குவதாம் (2 கொரி 8:9; 6:10)

தனது செல்வமானது மக்கட்தொகையில் **ஒரு சதவீதத்தினரிடமே** குவிந்திருக்கும் இந்தியாமீது **தேவன் கடுங்கோபமாயிருக்கிறார். இந்தக் கோடீஸ்வரர்களது** செல்வமானது **கரோனா காலத்தில் அளவுகடந்து பெருகியிருப்பதை** உங்களால் கற்பனை செய்தும் பார்க்க முடிகிறதா? **வறுமைக்கோட்டிற்குக் கீழிருப்போரை** (BPL) மிக அதிகமாய்க் கொண்டுள்ளது **நம் நாடுதான்.** இலட்சக்கணக்கானோருக்கு **ஒரு குடிசைகூட** இல்லாத காலத்தில் **ஆலயக் கோபுரங்கள்** கட்டுவதற்குக் **கோடிக்கணக்கில் பணம் திரட்டும் கிறிஸ்தவ சபைகள்மீது தேவனுக்கு கோபம் வராதா என்ன?** (கொரோனா எப்படி நீங்கும்)

**இந்தவடிக்கட்டின முட்டாள்தனத்திலிருந்து** நாம் என்றுதான் **மனந்திரும்புவோமோ? புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் பாதத்தில்** அவ்வளவு **பணம் கொட்டப்பட்ட போதும்,** உலகிலேயே மிக **உயரமான கோபுரம் ஒன்று** கட்டவேண்டுமென்று **அவர்களுக்குத் தோன்றவில்லையே !** மாறாக, **அப்பணக்குவியலை வறியோர்க்குப் பகிர்ந்தளித்தனர்** (அப் 4;34,35). திருநெல்வேலி போன்ற தென் மாவட்டங்களில் **கோபுர பைத்தியம்** பிடித்துள்ள **சமுதாயங்களிலிருந்து** ஸ்டேன்லியாகிய நான் வருகிறேன் என்பது எனக்கு வெட்கமாயிருக்கிறது. இவ்வரிகளையெல்லாம் எழுதுவதால் **குளவிக்கூட்டை கலைக்கிறேன்** என்பது எனக்கு

தெரியம்! **ரோம் நகரம் எரிந்துகொண்டிருக்கும்** போது மன்னன் **நீரோ பிடில் வாசித்துக்கொண்டிருப்பதை** என்னால் சகிக்க முடியாது ! **கோபுர திட்டங்களை** உடனே நிறுத்தி, **வட மாநிலங்களில்** பாவப்பட்ட மக்கள் வாழும் **தொலைவிடங்களில்** இலவச **மருத்துவ மனைகள்** கட்டிக்கொடுங்கள். **திறப்பின் வாசல் நிற்பது** என்பதற்கு இதுதான் பொருள் ! **செயலில்லாத விசுவாசம்** செத்தது. **செயல்பாடில்லாத ஜெபமும்** செத்ததுதான் . இன்றைய **கொடமையான** சூழலுக்கு தேவன் அல்ல. **நாமே காரணம்.** நம் ஜெபங்கள் செயல்பாடுகள் (கிரியை) இல்லாத ஜெபங்கள் ஆகும். **பொறுப்பு** அனைத்தையும் சவுகரியமாய் **தேவன்மீது** போட்டுவிடுகின்றனர். இது தவறு. **தேவனது நாளைய அற்புதத்திற்கு நமது இன்றைய சுத்திகரிப்பு இன்றியமையாதது** (யோசு 3:5). ஏதோ தேவனுக்குக்கு **காது செவிடாகிவிட்டது** போல நீங்கள் ஜெபத்தில் **(அக்கினி , அக்கினி என்றோ எழுப்புதல், எழுப்புதல் என்றோ கொரோனாவே போ என்றோ காது கீழிய கத்தவேண்டிய அவசியமில்லை).** நமது **வழிகளைச்** சரிபண்ணும்வரை நமது **ஜெபங்களுக்குப் பதில வராது**. ( ஏசா. 59:1-3)

**அரை அபிஷேகம் (Semi-Spirit-Baptism)**

அடுத்து **நான் எனது பெந்தெகொஸ்தே நண்பர்களிடம்** செல்லுகிறேன். **விசுவாசிகளைப்** பரிசுத்த ஆவியானவருடன் **ஆழமான அனுபவங்களுக்குள்** வழிநடத்த நீங்கள் எடுக்கும் ஊழிய முயற்சிகளைப் **பெரிதும் பாராட்டுகிறேன்.** ஆவியானவரின் அருள்மாரிக்கென்றே நீங்கள் நடத்தும் **ஜெபக்** கூட்டங்களில் ஆயிரங்கள் ஆவியின் அபிஷேகம் பெறுகின்றனர் என்பது மறுக்க முடியாதது. தேவனே துதிக்கப்படுவாராக! ஆனாலும் இங்கு **இறையியல் திருத்தம்** ஒன்று **தேவைப்படுகிறது. அந்நிய பாஷை பேசுவது** எனும் அப்போஸ்தலர்களின் - **இரண்டு - நான்கு** அனுபவம் **பரிசுத்த ஆவியானவரால் உண்டாகும் ஞானஸ்நானத்திற்கு** ஓர் அருள்நிறை "அடையாளம்" என்பது உண்மைதான் (அப்.2:4). ஆனால் நமது உடைமைகளை **ஏழை எளியவரோடு பகிர்வது** எனும் அப்போஸ்தலர் 2:44 **வசனத்தின் வெளிப்பாடுதான்** , (ஆவியானவரின் உண்மையான அடையாளம் ஆகும்.

ஆவியின் ஞானஸ்நானத்திற்கு மறுக்கமுடியா " **நிரூபனம் " (evidence) ஆகும்.** (அப்2:44) இரண்டாவதான் இது இல்லையேல் அது **அரை அபிஷேகம்தான்.** நான் எவ்விதம் இப்படி சொல்ல முடியும் என்று நீங்கள் வினவலாம். **ஆவியினால் ஞானஸ்நானம்** கொடுப்பவர் (Spirit - Baptizer) என இயேசு வானவரை அறிமுகம் செய்தது **திருமுழுக்கினர் யோவான்தான்** (மத் 3:11 ; லூக் 3:16). அதனை அவர் பரிசுத்த ஆவியினாலும் "**அக்கினியினாலும்**" கொடுக்கப்படும் ஞானஸ்நானம் என்றழைத்தார். அந்த அக்கினிமூலம் நமது வாழ்விலுள்ள குப்பை கூளங்கள் எரிக்கபட வேண்டும்,

விண்ணுலக மகிமையின் வெளிப்பாடு கொஞ்சமே கிடைத்தாலும் மண்ணுலக **தங்கத்தின்மீது** அந்நபருக்கிருக்கும் பிடிப்பு தளர்ந்துவிடுகிறது. **உலகப்பொருட்களுடன்** அவரைக் கட்டிவைத்திருக்கும் கயிறுகளை **ஆவியின் அக்கினி எரித்துவிடுகிறது**. முதன்முதல் **ஆவியின் அபிஷேகம்** பெற்றவர்களுக்கு நிகழ்ந்தது இதுதானே?தங்களது **நிலம்புலன்களை விற்றுத்** தேவையுள்ளோருடன் அதனைப் **பகிர்ந்துகொண்டனர்.** அவ்விதம் செய்யும்படி அவர்களை **அப்போஸ்தலர் தூண்டவும்இல்லை,** அவர்களுக்குக் **கட்டளையிடவும் இல்லை. அது அவர்களாகவே உடனடியாய்ச் செய்த காரியம் ஆகும்.** 50 சதவீதத்தை **எளியவருக்குக் கொடுத்துவிட** வேண்டுமென்பது யோவானின் **"தண்ணீர்"** ஞானஸ்நானத்திற்கான ஆயத்தம் (லூக் 3:10,11). இயேசுவின் **"தணல்"** ஞானஸ்நானத்தின் வெளிப்பாடோ 100 சதவீதம் (அப் 4:34,35). ஆனால் **அப்போஸ்தலர் 2:4** இல் நான் நின்று விட விரும்பவில்லை; **அப்போஸ்தலர் 2;44** க்கு நான் நகரவேண்டும். கணுக்காலளவு **ஆழம், முழங்காலளவு ஆழம்** அல்லது இடுப்பளவு **ஆழம்** என்றெல்லாம் நின்றுவிடாது **நீச்சலாழத்திற்குச் செல்ல வேண்டும்** ( எசேக் 47:1-5). **உணவற்றோர், உடையற்றோர் மற்றும் உறைவிடமற்றோருடன்** தங்கள் பொன்னையும் **பொருளையும் பகிர்ந்துகொள்ள வெளியே புறப்பட்டுச் செல்லாது, கூட்டங்களிலேயே கூச்சலிடுவது, ஆட்டிக்கொள்வது** மற்றும் ஆவியில் **கீழே விழுவது** போன்றவற்றிலேயே **திருப்தியடையும்** இன்றையப் போக்கு **என்னைப் புலம்பச் செய்கிறது** (மத் 25:34-46).

### வேரில்தான் பிரச்சனை! ( Problem in the root)

☐ **பணத்தைக்** குறித்து நான் ஏன் இவ்வளவு பேசுகிறேன் என்று நீங்கள் வியக்கலாம். நமதாண்டவர் **பரலோகம், நகரம்** ஆகிய இரண்டையும் குறித்துப் **பேசியதைவிட பணத்தைக் குறித்தே அதிகம் பேசியுள்ளார்** என்பது **உங்களுக்குத் தெரியுமா?** அவரது உவமைகளில் **42 சதவீதம் பணத்தைப் பற்றியதே** என்பது **உங்களுக்குத் தெரியுமா?**

புதிய ஏற்பாட்டில் **பத்து வசனங்களில்** ஒன்று **பணத்தைப் பற்றியே** நேரடியாய்ப் பேசுகிறது என்பது **உங்களுக்குத் தெரியுமா?** பைபிளில் ஜெபத்தைக் குறித்து **500 வசனங்கள்** மட்டுமே உண்டென்றும் **விசுவாசத்தைக் குறித்து 500க்கும் குறைவாகவே** வசனங்கள் உண்டென்றும், ஆனால் **பணத்தையும் உடைமைகளையும்** குறித்தோ **2000க்கும் கூடுதலாக வசனங்கள் உண்டென்பதும் உங்களுக்குத் தெரியுமா? செல்வத்தை** எளியோருடன் **தாராளமாய், தயாளமாய்ப்** பகிர்வதை நான் **"இரண்டாம் இரட்சிப்பு"** என்பேன் (லூக் 19:8,9). **பண ஆசையே,** தீயது அனைத்திற்கும் **"வேர்"** (1 தீமோ 6:10). நமது தவறு என்னவெனில், நாம் **"கிளைகளை"** மட்டுமே வெட்டுகிறோம்; **வேரை** அப்படியே விட்டுவிடுகிறோம். திருமுழுக்கினர் **யோவான்** அவர்கள் **கோடாரியை**

**"வேரில்"** வைத்தார்கள் (மத் 3:10; லூக் 3:9). எனவே தான் **"நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"** என்று வினவிய **மூவகையினருக்கும்** அவர் கொடுத்த பதில்களில் **பணமே** முக்கிய இடம் பெற்றிருந்தது (லூக்3:10-14). பவுலடியாரின் குழுவில் **லூக்கா** ஒரு **மருத்துவ மிஷனரியாயிருந்தார்** (கொலோ 4:14). உடல் வேதனையுடனிருப்போரோடு நேரடித் தொடர்புகொள்வது மருத்துவர்கள்தான். **பொறியியலர்** அல்லது வங்கி **அதிகாரிகளைவிட** மருத்துவர்களுக்கு **மனிதாபிமானம்** அதிகம் தான். **நான்கு** சுவிசேஷங்களின் ஆசிரியர்களில் **லூக்கா** மட்டுமே **நல்ல சமாரியன், செல்வந்தன்**-லாசரு, **சகேயு** ஆகியோரைப் பற்றி எழுதியுள்ளார் (லூக்10:16,19). இம்மூன்று சம்பவங்களும் **தானதர்மம்** மற்றும் **பணம்** பற்றியவையே. **விதவைகள்** குறித்த இதய பாரம் கொண்ட **டாக்டர் லூக்கா** அவர்கள் தனது **சுவிஷேத்திலும்** அப்போஸ்தல **நடபடிகள்** புத்தகத்திலும் பல இடங்களில் அவர்களைக் குறித்துப் பேசியிருக்கிறார் (லூக் 2:37; 4:25; 7:12; 18:3; 20:47; அப் 6:1; 9:39). அதனால்தான் கர்த்தர் **திருச்சபையின் பாடபுத்தகமாகிய** அப்போஸ்தலர் **நடபடிகளை** எழுதுவதற்குத் தேவன் அவரையே (லூக்காவையே ) தெரிந்துகொண்டதில் ஆச்சரியமில்லையே. புதிய ஏற்பாட்டின் **ஒன்பது ஆசிரியர்களில் இவர் ஒருவர்தான்** புறவினத்தார், அதாவது **யூதரல்லாதவர். தூத்துக்குடி** மாவட்டத்தில் **உள்ள நாசரேத்திலுள்ள** மிகப் பழமையான மருத்துவமனை (1870) **புனித லூக்கா மருத்துவமனை** (St.Luke's Hospital) என்றழைக்கப்படுகிறது.

## திருச்சபையில் நியாயத்தீர்ப்பு (Judgement in the church)

" நியாயதீர்ப்பு தேவனது வீட்டில் தொடங்கும் காலம் வந்துவிட்டது" என்று எழுதியது அப்போஸ்தலன் **பேதுருதான்** (1 பேது 4:17). **ஆதிச்சபையில்** முதல் **நியாயத்தீர்ப்பை வழங்கியதும்** அவரே. தேவையிலிருப்போருக்குப் பகிர்ந்தளிக்கும்படிச் சேர்க்கப்பட்ட **பணக்காரியத்தில்** தேவனிடம் **பொய் சொன்ன** அனனியா-சப்பீராள் எனும் ஒருமனத் தம்பதியர்மீதே **அடி விழுந்தது** (அப் 5:1-10).

"**எந்தன் ஆஸ்தி தேவரீர்,** முற்றும் அங்கீகரிப்பார்" ("Take my silver and my gold, not a mite would i withhold!") என்று எத்தனை முறை பொய்யாய்ப் நாம் ஆலயத்தில் பாடுகிறோம்! தன்னிடமிருந்த **விலையுயர்ந்த ஐம்பது ஆபரணங்களை** வெளிநாட்டு மிஷனரிப்பணிக்கு அனுப்பிவைக்க **ஒரு பெட்டிக்குள் வைத்தபோதுதான்** பிரான்சஸ் R.**ஹேவர்கால்** (1836-1879) என்ற அம்மையார் இப்பாடலை இயற்றினார்கள் என்பது நமக்குத் தெரியுமா? நாம் **பொய் பேசுகிறோம் , பொய்யாய் ஜெபிக்கிறோம் , பொய்யாய்ப் பாடுகிறோம்; ஆனாலும் அனனியா - சப்பீராள் போல நாம் நிர்மூலமாகாதது ஏனோ?** புலம்பலுடன் தீர்க்கன் எரேமியா நமக்குப் பதில் தருகிறார்: "கர்த்தருடைய கிருபையினாலேயே" (புல 3:22 அ). தேவனது கிருபையை வீணாய்ப் பெறாது பார்த்துக்கொள்வோம் (2 கொரி 6:1) . **முடிவுக்**

**காலத்தின் முடிவு** நெருங்கி வர வர, நமது இதயக் கடினத்திற்கேற்றபடி தேவனது கோபம் **அதிகரித்துக் கொண்டே இருக்கிறது** (ரோ 2:4).

**சுகமளிப்பு ஜெபங்கள்** (Healing Prayers)

**அப்போஸ்தல நடபடிகள்** புத்தகத்தில் **லூக்கா** அவர்கள் குறிப்பிடும் முதலாம் **உயிரோடெழுப்புதலின் அற்புதம் நடந்தது.** ஒரு வேளை **நன்கு வசதிபடைத்திருந்த தொற்காள் எனும் சகோதரியைதான்.** "சீஷி" (disciple) என்று குறிப்பாய் அழைக்கப்பட்டுள்ள ஒரே பெண்மணி **இவள்தான்** (அப் 9:36). அவளிடம் **"நற்செயல்கள்"** மற்றும் **"தருமங்கள்"** நிறைந்திருந்தன. தனது **தையல் திறனைப்** பயன்படுத்தி எத்தனையோ விதவைகளுக்கு **உதவிகள் செய்தார்** (வச 39). அம்மா, நீங்கள் **போதுமான பண வசதியுள்ள விதவையானால்,** தானதர்மச் செயல்களுக்கு **உங்களை முற்றிலுமாய் அர்ப்பணியுங்கள்.** உங்களது இம்மண்ணுலக வாழ்வில்தேவன் மனமகிழ்வார். **கரோனா தொற்று** நோயானது அநேகரை **மனைவியிழந்தவர்களாகவும் கணவனிழந்தவர்களாகவும் ஆக்கிவிட்டது.** உங்கள் அப்படிப்பட்ட **கவலைகளிலேயே** மூழ்கிப்போகாமல், வேதனையிலும் **தேவையிலும் தவிப்போருக்காய்** உழைத்திடுங்கள்(2 கொரி 1:3-5). சங்கீதம் 41 ல் தாவீதரசன் எழுதியது இங்கு எனது நினைவுக்கு வருகிறது: **"எளியோரின்** நலனில் அக்கறை கொள்பவன் **பேறு பெற்றவன்;** துன்ப நாளில் ஆண்டவர் **அவனை விடுவிப்பார்.** ஆண்டவர் அவனைப் பாதுகாத்து **நெடுங்காலம் வாழ வைப்பார்...** படுக்கையில் அவன் **நோயுற்றுக் கிடக்கையில்** ஆண்டவர் அவனைப் பலப்படுத்துவார்; நோய் நீங்கிப் **படுக்கையினின்று அவன் எழும்பும்படிச் செய்வார்."** "தர்மம் தலை காக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும்" என்ற பழங்காலத் தமிழ்பாடல் ஒன்றுண்டு. பெரும் தாக்கத்திற்குள்ளான பின்னர் **தானதர்மம்** குறித்து யோசிப்பதில் பயனென்ன? நெடுகவே, வழக்கமாகவே, **எளியோரை ஆசிர்வதிப்பவராய்** வாழ்ந்திடுங்கள்.

**சாதாரணமாக தெய்வீக சுகத்திற்காய்** ஜெபிக்கும் பிரசங்கிமார் **அதிவிரைவில்** பிரபலமாகிவிடுவார். அவர்களுக்கு இதோ ஒரு சில வார்த்தைகள் : "எனக்கருமையான ஊழியரே உங்கள் கூட்டத்தில், **பதிலளிக்கப்பட்ட ஜெபங்களைவிடப் பதிலளிக்கப்படாத ஜெபங்கள்** தான் அதிகம் என்பது இவ்வளவு ஆண்டுகளில் உங்களுக்கு தெரிந்திருக்கும். தைரியமிழக்காதீர்கள். ஆனால் தங்களது **தானதர்மச் செயல்களை** இருமடங்கு அல்லது மும்மடங்காக்க உங்கள் கூட்டத்தில் **நோயுற்றோருக்கு** அறிவுறுத்துங்கள். **அதிச்சீக்கிர சுகம் என்பது இதனுடன் சம்பந்தப்பட்டுள்ளது** (சங் 41:1-3; ஏசா 58:6-8). **பைபிள் என்ன சொல்கிறது என்பதைவிட நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்** என்பதையே உங்கள் கூட்டங்களில் கலந்துகொள்ளும் **பெரும்பாலான மக்கள் அதிகம் மதிக்கிறார்கள்!** எதிர்பார்க்கிறார்கள் உங்கள் ஊழியத்தில் **மிஷனரிப்பணிகள்** மற்றும் **நிவாரணத்**

**தேவைகளுக்குக் மக்களால் அனுப்படும் கூடுதலாக வரும் பணத்தை வைத்து** என்ன செய்யலாம் என்று **புதிய திட்டங்களை** கண்டுபிடிக்காதீர்கள். மாறாக, **பொருளாதார நெருக்கடியில்** தவித்துக்கொண்டிருக்கும் **ஊழியத் திட்டங்களுக்கு** அப்பணத்தைத் அப்படியே திருப்பிவிடுங்கள். எல்லாவற்றையும் **நீங்களே செய்ய விரும்பினால்** நீங்கள் நிச்சயம் **உங்களது பிரதான அழைப்பிலிருந்து** வழிவிலகுவீர்கள். R. ஸ்டான்லியாகிய **நான் எழுதியதை புரிந்து கொண்டமைக்கு நன்றி!** ஆண்டவராகிய இயேசு மக்களைக் குணமாக்குகிறவராய் **மட்டுமல்ல** அவர்களுக்கு **நன்மை செய்கிறவராயும்** சுற்றித்திரிந்தார் (அப் 10:38) என்று தான் வேதம் கூறுகிறது.

**பொருளாசையை அறிக்கையிடுங்கள் ! (confess covetousness!)**

**உடல் சுகத்திற்கான ஜெபம்** குறித்துப் நீங்கள் பேசுகையில்,அப்போஸ்தலன் **யாக்கோபு** நமக்குத் தரும் அறிவுறுத்தல்: **"நீங்கள் சுகமடையும்படி,** உங்கள் குற்றங்களை **ஒருவருக்கொருவர்** அறிக்கையிட்டு, ஒருவருக்காயொருவர் ஜெபம் பண்ணுங்கள்" (யாக்5:16). **பயனுள்ள ஜெபத்திற்குப் பாவ அறிக்கை கட்டாயம் தேவை.** "நோய்கள் **குணமாகுதல்"** என்று சொல்லுமுன் **"பாவங்கள் மன்னிக்கப்படுதல்"** என்றே தாவீது வரிசைப்படுத்துகிறார் (சங் 103:2,3). ஆனால் நாம் எதனை அதிகம் அறிக்கையிடுகிறோம்? தீயவை அத்தனைக்கும் **வேராகிய** உங்கள் **பண ஆசையை அறிக்கையிடுகிறோமா?** வயதான **ரோமன் கத்தோலிக்கப் பாதிரியார்** ஒருவர் சொன்னது: "இத்தனை ஆண்டுகளில் ஆயிரக்கணக்கானோர் என்னிடம் பாவ **அறிக்கை** செய்வதைக் கேட்டிருக்கிறேன். எவருமே இதுவரை **பொருளாசையை அறிக்கையிட்டதாய்த்** தெரியவில்லை!" பொருளாசை என்பது **நாகரீகமான பாவமாகிவிட்டது!** பொருளாசை அல்லது **பண ஆசை** என்றாலென்ன என்பதற்குப் பவுலடியார் தரும் விளக்கம் இதோ: "போதும் என்ற **மனநிலையுடனுள்ள தேவ பக்தியே பெரும் ஆதாயம்** . உலகத்திற்குள் நாம் எதையும் கொண்டு வந்ததில்லை **மரித்தபின் இங்கிருந்து நாம் எதையும் கொண்டுபோக முடியாது** என்பதும் நிச்சயம். எனவே , **உணவும் உடையும் நமக்கு இருந்தால் அதுவே போதும் என்றிருப்போம். செல்வந்தராக விரும்புவோர்** சோதனையிலும் **கண்ணியிலும்** சிக்கிக்கொள்கிறார்கள்; அப்படிப்பட்டவர்கள் அறிவீனமானதும், தீமை விளைவிக்கக்கூடியதுமான பல்வேறு தீய நாட்டங்களில் வீழ்ந்துவிடுகிறார்கள். இவை மனிதரைக் கேட்டிலும் அழிவிலும் ஆழ்த்துபவை. **பண ஆசையே** எல்லாத் தீமைக்கும் **ஆணிவேர்.** அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று வழுவித் திரிந்து பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள் மீது வருவித்துக் கொள்கிறார்கள்" (1 தீமோ 6:6-10). இந்த வலைக்குத் தப்பும் வழியையும் அப்போஸ்தலன் சுட்டிக் காட்டியுள்ளார்: "அவர்கள் நல்லதைச் செய்து, **நற்செயல்களில்** செல்வந்தர்களாகவும், தாராளமாய்க் **கொடுக்கிறவர்களும்,** தயாளமாய்ப் **பகிர்ந்தளிப்பவர்களுமாய் இருக்க வேண்டும்.** இவ்வாறு அவர்கள் தங்களது

வருங்காலத்திற்கென்று நல்லதோர் அடித்தளமாக இச்செல்வத்தைச் சேர்த்து வைப்பதால் நித்திய வாழ்வை அடைய முடியும்" (வச 18,19). மன்னன் நேபுகாத்நேச்சாருக்குத் தீர்க்கன் தானியேல் சொன்ன ஆலோசனை என்றைக்கும் பொருத்தமானது: "அரசே, நல்லறத்தைப் பேணித் தீச்செயல்களை நீக்குக! **ஒடுக்கப்பட்டோருக்கு இரக்கம்** காட்டி உம் பாவக் கறைகளைப் போக்கிக் கொள்க" (தானி 4:27) என்று ஆலோசனைக் கூறுகிறார்.

**செத்த ஜெபங்கள்** (Death Prayers)

இயேசுவானவர் தமது போதகத்திலும் செயல்பாடுகளிலும் **தானதர்மத்திற்கு** அதிமுக்கியத்துவம் கொடுத்தார். தமது மலைப்பிரசங்கத்தில் **ஜெபத்தையும் உபவாசத்தையும்** குறித்துப் பேசுமுன் **தானதர்மத்தைக்** குறித்தே உபதேசித்தார் (மத் 6:1-4,5-15,16-18). அவரது மாதிரி ஜெபத்தில், "எங்கள் கடனாளிகளை நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று நமக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்துள்ளார் (வச 12) . இது வேறு வழியின்றிக் **கடன் வாங்குவோரைக் குறித்துப்** பழைய ஏற்பாட்டில் நெடுகவே போதிக்கப்பட்டுள்ள பாணியிலேயே அமைந்துள்ளது (உபா 15). நாமோ தந்திரமாக, வசதியாக, "**கடன்கள்**" என்ற பதத்தை "**பாவங்கள்**" என்று மாற்றிக்கொண்டோம்! மேசியாவின் பணியறிக்கையில் (Messianic Manifesto) முதலில் வருவது "**தரித்திரருக்கு**" சுவிஷேசம் பிரசங்கிக்கப்படுவதே (லூக் 4:18அ). இயேசுவின் குழுவிற்கிருந்த ஒரே பணப்பை தானதர்மத்திற்கென்றே இருந்திருக்கலாம் (யோ 12:6; 13:29), அவரது பொதுச் செலவுகள் மற்றும் ஊழியத் தேவைகளை **யோவன்னாள்** மற்றும் **சூசன்னாள்** போன்ற செல்வாக்குள்ள பெண்டிர் கவனித்துக் கொண்டனர் (லூக் 8:1-3).

நலிந்தோரைத் தாங்கவேண்டுமென்று அறிவுறுத்தும்போது, ஆண்டவர் இயேசு சொன்னதாகப் பவுலடியார் கூறியது: "**வாங்குவதற்குக் கை நீட்டுவதைவிடக் கொடுப்பதற்குக் கை நீட்டுவதே பேராசீர்வாதம்** " (அப் 20:35). நான்கு சுவிசேஷங்களில் எங்கும் இயேசுவின் இவ்விதக் கூற்றைக் காணோம். அதன் பொருளென்ன? எளியவருக்கு இரங்கும் குணத்தைச் சீடரும் மற்றவரும் தங்கள் போதகரிடம் நெடுகவே பார்த்திருக்கிறார்கள். **செயலில்லாத விசுவாசம் செத்தது** என்று அவரது சொந்தத் தம்பியாகிய யாக்கோபு எழுதியதில் ஆச்சரியமில்லையே (யாக் 2:14-17) ! அவர் சமூகச் சேவையை (social service) ஆன்மீகச் சுத்திகரிப்பிற்கு (spiritual sanctity) முன்னதாக் வரிசைப்படுத்தியுள்ளார் (1:27). நடைமுறை ஆதரவு தராமல் **சம்பிரதாய ஆசீர்வாதம்** கூறுவதை அவர் கண்டிக்கிறார் (2:15). **சுகபோக விரும்பிகள்** தங்களது வேலையாட்களைக் கொள்ளையடித்துச் சம்பாதித்த **செல்வம்,** ஆடைகள், **பொன்**, வெள்ளி, **சொத்து** யாவும் கடைசி நாளில் **சாம்பலாகிவிடும்** என்று அவர் எச்சரிக்கிறார் (5:1-5). என்னே வார்த்தைகள்! ஆம், இந்த மனப்பான்மையை அவர் தனது அண்ணனிடமிருந்து பெற்றுக்கொண்டார் ! இவ்விதக் குரல்கள் நமது பிரசங்க பீடங்களில் ஒலிக்காதது ஏன்? **தானதர்மங்கள்** செய்து ஏறெடுக்கப்படும் **ஜெபங்கள்**

கிருபாசனத்தில் நல்ல வரவேற்பு பெறும். ஏன் தெரியுமா? அங்கே நமக்காய் உட்கார்ந்திருக்கும் நடுவரானவர் பலக்குறைவானவர்களுக்குப் "**பரிதாபம்** " காட்டுவதில் நிகரற்றவர் (எபி 4:15). இளமைப் பருவம், வாலிபப் பருவம், ஆடவப் பருவம் ஆகியவற்றைக் கடந்துவந்த அவர் உடலுக்கடுத்த தேவைகளிலும் பொருளாதாரக் காரியங்களிலும் நெடுகவே **வசதிக்குறைவுகளை** அனுபவித்தவர். **தேவையில்** வாழ்வதென்றால் என்னவென்று அவருக்கு நன்றாகவே தெரியும்? **நமது ஜெபங்கள்**" ஏழைகள், **விதவைகள், திக்கற்றோரின் தேவனையே** " நோக்கியவை என்பதை எப்பொழுதும் மறந்துவிடாதீர்.

**குருட்டு ஊழியரும் குருட்டு மக்களும்** (Blind Pastors & Blind People)

**தானதர்மம்** என்பதற்கு முதன்மையான வழிகாட்டியும் மாதிரியுமாய் இருக்கும்படி கிறிஸ்துவின் சபை அழைக்கப்பட்டுள்ளது. அவர் நம்மை "**மண்ணுலகிற்கு உப்பு** " என்றும் "**பூவுலகிற்கு வெளிச்சம்**" என்றும் இருக்கும்படி அழைத்துள்ளார் (மத் 5:13,14) . நாம் **திருச்சபைக்கு** உப்பாகவும் **திருச்சபைக்கு** வெளிச்சமாகவும் இருக்கும்படி **அழைக்கப்படவில்லை**. நமது தவறான புரிதலே திருச்சபையை உப்பு கரிப்பதாகவும், கண் கூசும் வெளிச்சமாகவும் மாற்றிவிட்டது, சமுதாயத்தில் நம்மை ருசிப்பாருமில்லை, ரசிப்பாருமில்லை. நமது அழைப்பிற்கேற்ப நாம் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்று அடுத்து வரும் வசனங்களில் ஆண்டவர் போதித்துள்ளார். அது "**நற்செயல்கள்**" மூலமாகவே (வச1, 6). உப்பு என்றால் அது நல்ல "**சொற்கள்**" அல்ல, நல்ல "**செயல்கள்**" **வெளிச்சம் என்றால்** நல்ல **சொற்கள் அல்ல** நல்ல செயல்கள்! இதுவே **அப்போஸ்தலர் வலியுறுத்தியதாகவுமிருந்தது**. தீத்துவுக்குப் பவுல் எழுதியதிலுள்ள அழுத்தத்தைக் கவனியுங்கள்: தீத்து 3:8,14, இந்த வார்த்தை உண்மையுள்ளது ; தேவனிடம் விசுவாசமானவர்கள் **நற்செயல்கள்** செய்யக் கவனமாயிருக்கும்படி நீ இவற்றை குறித்துத் **திட்டமாய்ப்** போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்... நம்முடையவர்கள் கனியில்லாதவர்களாயிராதபடி **குறைவுகளை** நீக்கும் வகையில் **நற்செயல்கள்** செய்யப் பழகட்டும். தீத்துவுக்குப் பவுல் எழுதிய இவ்வார்த்தைகளின் அடிப்படையில் **சபை மேய்ப்பர்கள்** ஒன்றுவிட்டு ஒரு பிரசங்கத்திலாவது "**நற்செயல்கள்** " குறித்துத் திட்டமாய் போதிக்க வேண்டும். துர்ப்பாக்கியமாக அவர்கள் **தானதர்மத்தைவிடத் தசமபாகம்** குறித்தே அதிகம் உபதேசிக்கின்றனர். இதுதான் **இயேசுவின் காலத்து மாய்மாலக்காரப் பரிசேயரின் நிலை.** சிறு தானியங்களில்கூடத் **தசமபாகம்** செலுத்திவந்த அவர்கள் "**விசேஷித்த**" அல்லது "**அதிமுக்கியமான**" **தானதர்மத்தைக் கடைபிடிக்காது** விட்டுவிட்டனர் (மத் 23:23). தேவாலயத்திற்கு அன்று **ஜெபிக்கச்** சென்ற அந்த பரிசேயன் "**உபவாசம்**" குறித்தும் "**தசமபாகம்**" குறித்தும் பெருமிதமாய்ப் பேசினான்; அவனது பட்டியலில் **தானதர்மம்** இடம் பெறவில்லை (லூக் 18:12). **மல்கியா** 3:10 மேற்கோள் காட்டி கிறிஸ்தவரில்

பெரும்பாலானோர் **ஏமாற்றப்பட்டுள்ளனர்**. இந்த வசனத்தின்படி, முற்காலங்களில் **ஆகாரம் இல்லாதோருக்கு** "ஆகாரம்" கொடுப்பதற்காகவே **தசமபாகம்** மற்றும் **காணிக்கைகள்** பிரதானமாய் செலவிடப்பட்டன. உபாகமம் 14:28,29ஐ நீங்களே வாசித்துப் பாருங்கள். "**நிலம் கிடைக்காத** லேவியர், **பரதேசிகள், திக்கற்றோர், விதவைகள்**" ஆகியோரே **தசமபாகக் காணிக்கைகளால்** பயனடைந்தனர். திருச்சட்டத்தின் அடிப்படை அர்த்தத்தையே தமது காலத்து **மதவாதிகள்** மறந்துவிட்டதாலேயே **இயேசு** அவர்களை வெகுவாய்க் **கடிந்துக்கொண்டார்** (மத் 23:23). அவர்களைக் "**குருட்டுப் வழிகாட்டிகள்**" என்று ஆண்டவர் திட்டினார் (வச 24). ஐயோ, **எத்தனை குருட்டு ஆயர்களும்**, குருட்டு **போதகர்களும்**, குருட்டு பாஸ்டர்மார்களும் **குருட்டுச் சபையினரை** நடத்திக்கொண்டிருக்கின்றனர்! நமது **கண்களிருந்து** (சவுலின் **குருட்டு கண்களின்) செதிள்களை நீக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.**

இறுதியாக நம்முடன் பேசுவதற்குத் **தீர்க்கன் ஆமோஸ்** அவர்களை மேடைக்கு அழைக்கிறேன்: "**சீயோனில்** நிர்விசாரமாயிருப்போருக்கு ஐயோ! .. **தந்தக் கட்டில்களில்** படுத்துக்கொண்டு , உல்லாசமாய் உழன்று, **மந்தையிலுள்ள ஆட்டுக்குட்டிகளையும்**, மாட்டுத் தொழுவத்திலுள்ள **கன்றுக் குட்டிகளையும் தின்று**, தம்புரு **வாசித்துப் பாடி**, தாவீதைப்போல **இசைக்கருவிகளைத்** தங்களுக்கு உண்டுபண்ணி, **நடனமாடி** பெரிய பாத்திரங்களில் மதுபானம் குடித்து, சிறந்த வாசனைத் தைலங்களைப் பூசிக்கொண்டு வாழும் அவர்களை பார்த்துக் கூறுகிறார்.

**யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்குக் கவலை படாதிருக்கும்** உங்களுக்கு ஐயோ!" (ஆமோஸ் 6:1, 3-6). **சீயோன்** என்பது **சபையைக் குறிக்கும்; யோசேப்பு** என்பவர் **வறுமையில் வாடும்** நமது சகோதர சகோதரிகளைக் குறிக்கிறார்.

**தனித்து உங்களுடன்....** (Personal)

**ஜெபிப்பதையும் துதிப்பதையும்** தானதர்மச் செயல்களுக்குப் பதிலாக்கியுள்ள **மார்கத்தைத் தேவன் வெறுக்கிறார்** (எபி 13:15,16). அதனை நிறுத்துங்கள்

## என் சொத்து விவரங்கள்


### R. ஸ்டேன்லியாக என் சொத்துக்கள் விவரம்

எனது உடைமைகள் குறித்து உங்களோடு R. ஸ்டேன்லியாகிய நான் பேசட்டும் . **ராணிப்பேட்டையில்** BHELக்கு அருகில் நான் வாங்கியிருந்த **ஒரே நிலமாகிய** இரு வீட்டுமனைகளை **ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திற்கு (BYM) வழங்கிவிட்டேன்.** எங்களது ஒரே அசையா சொத்தாகிய 45 ஆண்டு **பழைமையான வேலூர் வீட்டை** எங்கள் ஒரே பேறான (மகள்) குமாரத்தி சுதந்தரிப்பாள். **எனது சேமிப்பில்** மூன்றிலொரு பங்கை **தானதர்மத்திற்கும்**, மூன்றிலொரு பங்கை **இறைப்பணிக்கும்**, அடுத்த மூன்றிலொரு

பங்கை **எங்கள் மகளுக்கும் என்று எடுத்து வைத்துவிட்டேன்.** எனது மனைவிக்கு **நகையென்று** பெரிதாக **ஒன்றும் கிடையாது.** "**குறைந்த** சாமான், **நிறைந்த** வசதி, பயணத்தை இனிதாக்குக" என்பது இந்திய ரயில்வே வாசகங்களில் ஒன்று! "Less luggage, more comfort , Make travel a pleasure!" **உங்களது சேமிப்புகள், நகைநட்டுகள்** எல்லாவற்றையும் **கணக்கிடுங்கள்.** அதில் குறைந்தது **25 சதவீதத்தையாவது** தானதர்மத்திற்கென்று **ஒதுக்கிவிடுங்கள்.** தரித்திரத்திலும் **தரித்திரத்தில் வாழுவோர்** நடுவில் தொண்டாற்றும் **நிறுவனங்களுக்கும்** ஊழியங்களுக்கும் அதனை **பகிர்ந்து கொடுங்கள். தாமதிக்காதீர்கள்.** எல்லாவற்றையும் உங்கள் பிள்ளைகளுக்கே விட்டுச் செல்லாதீர்கள். திருமறைப் பாணியில் கூற வேண்டுமானால் அது **ஞானமுள்ள உக்கிராணத்துவம் அல்ல.** அவர்கள் எவ்விதம் அதனைப் பயன்படுத்துவர் என்று 100 சதவீதம் உங்களுக்கு உறுதியாய்த் தெரியாது. **கடின உழைப்பினாலும்** அசவுகரியங்கள் நடுவிலும் **வாழ்வில் உயர்வதே ஆரோக்கியம்.** நீங்கள் எளியவருக்குக் கொடுத்துவிடும் தொகை அனைத்தும் **விண்ணக வங்கியில்** உங்கள் கணக்கில் **உடனே ஏறிவிடும்** (லூக் 18:22 ; 1 தீமோ6:17-19).

வழியனுப்பு அடக்க ஆராதனை (Funeral-Farewell) உங்களுக்குப் பூவுலகில் கிடைக்கிறதோ இல்லையோ, **அமோகமான வரவேற்பு பரலோகில் உங்களுக்குக் காத்திருக்கும்!**

**R. ஸ்டான்லி,** வெல்லூர். (BYM)



Bro. SAMUEL JAYAKUMAR

## கர்த்தர் அழைத்துக்கொண்டார்

சகோ. ஜெயக்குமார், சென்னை அவர்கள் தனது 71வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். கடைசி நேரம் என்பதை அவர் அறிந்துகொண்டதால் ஜெபத்தில் தன்னை மரணத்துக்கு ஆயத்தப்படுத்திக்கொள்ள போதுமான நேரம் சகோதரனுக்கு கிடைத்து. சகோ. ஜெயக்குமார் அவர்களின் மனைவி, பிள்ளைகள் இரண்டு பேர். பிள்ளைகளின் குடும்பத்துக்காகவும் ஜெபித்துக்கொள்வோம்.

சகோ. ஜெயக்குமார் அவர்களும், அவர் துணைவியார் Mrs. சந்திரகலா அவர்களும் மிஷனரி ஊழியங்களுக்கும், உண்மையான ஊழியர்களுக்கும், ஜெபத்திலும், காணிக்கையிலும் பாரத்தோடு தொடர்ந்து தாங்குவார்கள். மஷனரி கூட்டங்கள் அவர் வீட்டின் அருகே எங்கு நடந்தாலும் தவறாமல் பங்குகொண்டு மிஷனரி கூட்டங்களுக்கு செய்தி கொடுக்க வரும் பிரசங்கிமார்களை தங்கள் வீட்டில் தங்க வைத்து நன்றாக உபசரிக்கும் வழக்கம் இவர்களுக்கு உண்டு. மரித்த சகோ. ஜெயக்குமார் குடும்பம் **ஜாமக்காரன்** பத்திரிகையின் நீண்ட கால வாசகர்களாகும். சகோதரனின் வாழ்க்கைக்காக தேவனை துதிக்கிறேன். அவர் குடும்பத்துக்காக நாம் ஜெபித்துக்கொள்வோம்.

# தேவனண்டை வரவழைக்கப்பட்டார்



திருமதி **சரோஜினி ராஜா** அவர்கள் தனது 95ம் வயதில் சேலத்தில் 2021 மே மாதம் சகல ஆயத்தத்தோடும் தன் ஓட்டத்தை முடித்தார். இவர் கணவர் Rev. ராஜா D. ஸ்டீபன் அவர்கள் சேலத்தில் பிரபல பிரமுகரும், சேலம் YMCA நீண்ட கால தலைவராகவும் இருந்தவர். சேலத்திலிருந்து திருச்சி மாவட்டம் வரை பல சபைகளை உருவாக்கியவர். பல இடங்களில் ஆலயங்களை கட்டி நூற்றுக்கணக்கான பாஸ்டருக்கு தொடர்ந்து மாத சம்பளம் கொடுத்து தன் மரணம் வரை அந்த உதவிகளை நிறுத்தாமல் தொடர்ந்து தாங்கி வந்தார்.

திருமதி சரோஜினி அம்மையார் அவர்கள் வயது முதிர்ந்த நிலையிலும் எல்லா ஞாயிறு ஆராதனையிலும், ஜெப கூட்டங்களிலும் பங்கெடுத்து ஆலயத்துக்கு வரும் பல சகோதரரிகளுக்கு ஆலோசனைகளை கூறி ஜெபித்து அனுப்புவார்.

அம்மையாரின் ஜெப வாழ்க்கைதான் பிள்ளைகளை. பேரப்பிள்ளைகளை ஆவிக்குறிய ஜீவியத்தில் வளர்த்தி ஊழியம் செய்யவும் காரணமாக இருந்தது. அம்மையாரின் சாட்சியுள்ள ஜீவியத்துக்காக தேவனை துதிக்கிறேன்.

**சரோஜினி** அம்மையாரின் ஆவிக்குரிய ஜீவியத்துக்கு முக்கிய காரணம் அவருடைய பெற்றோர் என்றால் மிகையாது. நான் 1964ம் வருடம் மணம் திரும்பி இரட்சிக்கப்பட்டபோது அன்று என் ஆவிக்குரிய வளர்ச்சிக்கான சரியான சபை சேலத்தில் இல்லை என்று கூறலாம். அந்த சூழ்நிலையில் நான் டாக்ரராக சொந்த கிளீனிக் நடத்திய **காடையாம்பட்டி** என்ற கிராமத்தில் வாழ்ந்த **சகோ. வாசு** என்ற சகோதரன் சேலத்தில் **சரோஜினி ஸ்டீபன்** அவர்களின் தகப்பனார் **Rev. ஞானாதிக்கம்** என்பவர் சேலம் மரவனேரியில் **ஆன்டரசன் சபையில்** வேத பாடம் நடத்துகிறார் என்றுகூறி என்னை அழைத்துக்கொண்டு போனார். மிக அற்புதமாகவும். தெளிவாகவும் வேத பாடம் போதித்தார். அதை கேட்டதற்கு பிறகுதான் வேதாகம கல்லூரி சென்று இன்னும் அதிகமாக வேதத்தை அறிய வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டு **பங்காரபேட்டை** SIBC **வேதாகம கல்லூரியில்** சகோ. **P. சாமுவேல்** (டேனிஷ்பேட்டை பெத்தேல்) அவர்கள் மூலமாக அந்த வேதாகம கல்லூரியில் சேர்ந்தேன்.



Mrs. சரோஜினி அம்மையாரின் கணவர் Rev. Raja D. Stephen அவர்கள்தான் சகோ **P.சாமுவேல்** அவர்களுக்கும் Dr. **சாம் கமலேசன்** அவர்களுக்கும் இப்போதுள்ள டேனிஷ்பேட்டை **பெத்தேல்** அமைந்துள்ள இடத்தையும் அதை சுற்றியுள்ள சுமார் 100 ஏக்கர் நிலத்தையும் இலவசமாக திரு. **அண்டர்சன்** மிஷனரி அவர்களிடமிருந்தும் Mr.& Mrs. **பிலிப்ஸ்துரை** அவர்களிடமிருந்தும் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலத்தை வாங்க மிக முக்கிய காரணமாக இருந்தார். திருமதி சரோஜனி அம்மையாரின் வாழ்க்கைக்காக தெய்வத்தை துதிக்கிறேன்.

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

# அறிவிப்பு

**ஜாமக்காரன்** (தமிழ் & மலையாளம்) பத்திரிகையை **www.jamakaran.com** என்ற வெப்சைட்டில் நீங்கள் டவுன்லோட் செய்து வாசிக்கலாம்.

ஜாமக்காரன் பத்திரிகை **அனுப்ப வேண்டாம்** என்பவர்களும் – ஜாமக்காரன் பத்திரிகை **வேண்டும்** என்று விரும்புபவர்களும் உங்கள்முழு **விலாசமும், கைபேசி – தொலைபேசி** எண்ணையும் எழுதி எனக்கு அனுப்பினால் உடனே ஜாமக்காரன் பத்திரிகை உங்களுக்கு அனுப்பப்டும். ஜாமக்காரன் **வேண்டாம்** என்பவர்களின் **விலாசம்** கம்ப்யூட்டரிலிருந்து நீக்கப்படும்.

உங்கள்ஜெப குறிப்புகளை, கடிதம் – அல்லது **e-mail** வழியாக அனுப்பலாம்.

**கொரோனா** 3ம் அலையால் **வாசகர் குடும்பம்** யாரும் பாதிக்காதபடி இருக்க தினசரி **காலையும் – மாலையும்** ஜெபிக்கிறோம். கர்த்தரின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

– **ஜாமக்காரன்**

**JUNE-2021**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.